Registered as a News Paper

பொழிவு: 28
குவிப்பு: 05
பக்கங்கள்:08
விலை: 50/-
வைகாசி: 2023

(ISSN 1800-2641)

# மன்னா

MANNA மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை மன்னா

THE TAMIL CATHOLIC MONTHLY BY THE DIOCESE OF MANNAR - Kalaiyaruvi, Social Communication Centre, Manna Paper Office, No.202, Talaimannar Road, Mannar, Sri Lanka.
Telephone No : 023-2250789 / 076-3801841, Email : mannamnrc@gmail.com, Web-www.manna.lk, Fb - Mannar Catholic Media
"Registered in the Department of Posts of Sri Lanka under No. QD / 104 / News / 2021"

"ஒரு கூட்டொருங்கியக்கத் திருஅவைக்காக 42வது ஆண்டுப்பயணம்"

## குருத்துவ அருட்பொழிவு




கடந்த 09.04.2023 அன்று காலை 9.30 மணியளவில் மன்னார் செபஸ்தியார் பேராலயத்தில் வைத்து மன்னார், யாழ், மட்டக்களப்பு மறை மாவட்டங்களைச் சேர்ந்த 06 திருத்தொண்டர்கள் அந்தோனி டெஸ்மன் குரூஸ், சகாயநாதன் ராஜசேகர் டயஸ், அலெக்ஸ் கிப்சன் அன்ரனி டனோசன், சாள்ஸ் மத்தியூ டெஸ்மன் ராஜ், யோகபாலன் சுதர்சன், குணசீலன் சிலைக்சன் ஆகியோர் கிளறேசியன் சபை குருக்களாக மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட் கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்களால் திருநிலைப்படுத்தப்பட்டார்கள். இவர்கள் ஆறு பேரும் கடந்த 2021ம் ஆண்டு மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி பொன்னையா ஜோசப் ஆண்டகையினால் வவுனியா இறைஇரக்க திருத்தலத்தில் வைத்து திருத்தொண்டர்களாக திருப்பொழிவு செய்யப்பட்டார்கள். குருத்துவ பணி வாழ்வில் தடம்பதித்துள்ள எம் புதிய குருக்களை எம் மறைமாவட்டம் சார்பாக வாழ்த்துவதுடன் இவர்களின் பணிவாழ்வு சிறக்க இறையாசீர் வேண்டி செபிக்கின்றோம்.●

## தேவ அழைத்தல் ஞாயிறு




உலக தேவ அழைத்தலை நினைவுகூரும் பொருட்டு மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் 30.04.2023 அன்று தேவ அழைத்தல் கண்காட்சி மற்றும் தேவ அழைத்தல் முகாம் நடைபெற்றது. இந்நிகழ்வை பேராலய பங்குத்தந்தை அருட்பணி அகஸ்ரின் புஸ்பராஜ் அவர்கள் சிறப்பான முறையில் ஒழுங்கமைத்திருந்தார்.●

## உயிர்ப்பு ஞாயிறு குண்டுவெடிப்பில் உயிரிழந்தோருக்கான நினைவேந்தல்



கடந்த 21.04.2019 அன்று ஈஸ்டர் தின குண்டு வெடிப்பில் உயிரிழந்த விசுவாசிகளின் ஆன்மாக்களை நினைவுகூர்ந்து இறை வேண்டல் செய்யும் நிகழ்வானது மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி பிடலிஸ் லயனல் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்களின் தலைமையில் புனித செபஸ்தியார் பேராலயத்தில் கடந்த 21.04.2023 அன்று நடைபெற்றது. இந்நிகழ்வில் மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் மற்றும் ஏனைய அருட்பணியாளர்கள், அருட்சகோதரர்கள், அருட்சகோதரிகள் ஆகியோர் கலந்துகொண்டு அவர்களின் ஆன்ம ஈடேற்றத்திற்காக செபித்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. ●

## 2வது இறை இரக்க நற்செய்தி மாநாடு நிகழ்வு



மன்னார் கள்ளிகட்டைக்காடு பகுதியில் அமைந்துள்ள டிவைன் மெர்சி தியான இல்லத்தில் 2வது இறைஇரக்க மாநாடானது கடந்த 12.04.2023 தொடக்கம் 16.04.2023 வரையான காலப்பகுதியில் நடை பெற்றது. அருட்பணி அகஸ்ரின் முண்டேகாட் VC, ரபாயேல் கூத்தூர் VC மற்றும் திரு.ஜோர்ஜ் தரகன் ஆகியோர் இம் மாநாட்டை சிறப்பாக வழிநடத்தியிருந்தனர்.

இந்நிகழ்வின் இறுதிநாள் திருப்பலியானது மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையினால் ஒப்புக் கொடுக்கப்பட்டது. இதில் குருமுதல்வர் உட்பட ஏனைய அருட்பணியாளர்கள், அருட்சகோதரிகள் கலந்துகொண்டதுடன் ஏராளமான இறைமக்களும் கலந்துகொண்டு சிறப்பித்திருத்தமை குறிப்பிடத்தக்கது.●

## "திருவிவிலிய" எழுத்து, பேச்சுப் போட்டிகளுக்கான தேசிய சான்றிதழ் வழங்கும் நிகழ்வு





இலங்கைக் கத்தோலிக்க ஆயர் பேரவையின் தேசிய மறைக்கல்விச் செயலகத்தின் வழிகாட்டுதலோடு, மறைமாவட்ட மறைக்கல்வி நிலையங்களூடாக இலங்கை அரசின் கிறிஸ்தவ சமய அலுவல்கள் திணைக்களம் 2020 மற்றும் 2022ம் ஆண்டுகளில் கத்தோலிக்க மாணவர்களுக்காக தேசிய ரீதியில் நடாத்திய "திருவிவிலிய" எழுத்து, பேச்சுப் போட்டிகளில் மன்னார் மறைமாவட்டத்திலிருந்து பங்குபற்றி வெற்றி பெற்றவர்களுக்கான வெற்றிப்பதக்கம் மற்றும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு 13.04.2023 வியாழக்கிழமை மன்னார் நகர மண்டபத்தில் மன்னார் மறைமாவட்ட புனித யோசேப்பு மறைக்கல்வி நிலையத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

→02

## புனித யோசேவ் வாஸ் இறையியல் கல்லூரியின் டிப்ளோமா, இளங்கலைமானி (B.A.) கற்கைநெறி மற்றும் குறுங்கால கற்கைநெறிகளுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு






மன்னார் மறைமாவட்டத்தில் இயங்கி வரும் புனித யோசேவ் வாஸ் இறையியல் கல்லூரியில் இறையியலில் உயர் டிப்ளோமா மற்றும் குறுங்கால கற்கைநெறிகளை பயின்று, கல்வியாண்டு 2021/2022ல் இறுதிப் பரீட்சைகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கிய வைபவம் இக்கல்லூரியின் இயக்குநர் பெருமதிப்பிற்குரிய அருட்கலாநிதி அ.கிறிஸ்ரி றூபன் பெர்னாண்டோ அடிகளாரின் தலைமையிலே, இக்கல்லூரியில் கல்வி கற்பிக்கும் விரிவுரையாளர்கள், கல்லூரியின் ஊழியர்கள், கல்லூரி மாணவர்கள் மற்றும் இச்சான்றிதழ்கள் பெற்ற மாணவர்களின் பெற்றோர்கள் இவர்களுடன் இணைந்து மே மாதம் 16ஆம் தேதி 2023 அன்று காலை 10 மணியளவில் தொடங்கி மாலை 1 மணிவரை மன்னார் நகரமண்டபத்தில் இனிதே இடம்பெற்றது.

→02

"மன்னார் மறைமாவட்டம் வேதசாட்சிகளின் பூமி"

# மன்னா

## பதிப்பாசிரியரின் மனப்பொழிவு

அன்பான வாசகர்களே!

பரிசுத்த கன்னிகையும் நிகரற்ற தாயுமான அன்னை மரியாவுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட புதியதோர் மாதத்தில் உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன். இம் மாதத்தில் எம் உழைப்பின் மேன்மையையும் இன்றும் நலிவுறும் ஒவ்வொரு தொழிலாளர்களையும் நினைந்து அவர்களை இறை அன்பில் ஒப்புக்கொடுத்து புனித சூசை தந்தையின் பரிந்துரையை வேண்டி நாம் மே – 01 தொழிலாளர் தினத்தை நினைவுகூர்ந்தோம் பல்வேறு நிலைகளில் தொழில் புரியும் ஒவ்வொரு தொழிலாளர்களையும் அவர்களின் உழைப்பின் நேர்மைக்கு ஏற்றால் போல நற்பயன் கிடைக்க வேண்டுமென்று இறைஆசீர் நல்குகின்றேன். அத்துடன் எம் தாய் திருஅவை திருச்செபமாலை பக்தியை ஊக்குவிக்கும் நோக்குடன் அன்னையின் புகழ் ஓங்க எம் வேண்டுதல்கள் நிறைவேற அன்னை வழியாக செபிக்க அழைப்பு விடுக்கின்றது.

நாம் வாழும் இலங்கை தாய் நாட்டின் நிலையை சற்று உற்று நோக்குவோம். வாழும் மக்களின் நலன்பற்றி சிறிதளவும் யோசிக்காத அரசியல் தலைவர்களின் வழி நடத்துதலின் கீழ் செய்வதறியாது நெருக்கடிக்குள்ளான நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இந்நிலையில் சமய நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் நோக்குடன் பல்வேறு செயற்பாடுகள் இந்நாட்களில் நடைபெற்று வருகின்றன. காலம் காலமாக பாரமரிக்கப்பட்டு வந்த நிலங்கள் அரச தேவைக்காக பயன்படுத்தப்படுகின்றன என்ற போர்வையில் புதிது புதிதாக சமய ஸ்தலங்கள் ஸ்தாபிக்கப்படுகின்றன. இதனால் மக்களின் தரை நிலங்கள் சூரையிடப்படுவதுடன் சமய ரீதியான குழப்ப நிலையும் உருவாகியுள்ளது. மக்களுக்கு பாதுகாப்பாக இருக்க வேண்டியவர்களோ மக்களின் வாழ்வியலை பாதிக்கும் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர்.

இறைமக்களே சற்று விழிப்படையுங்கள், மத ஆதிக்கம் உங்கள் மீது, உங்கள் இனத்தின் மீது, உங்கள் மதத்தின் மீது திணிக்கப்படுவதை விரட்டியடியுங்கள், தனி ஒரு மனிதன் முழு சுதந்திரத்துடன் தன் நிறைவுடனும் வாழ்வதற்கு அனைவரும் விளிப்புணர்வு பெற்றவர்களாக ஒன்றிணைவோம்.

நன்றி

என்றும் கிறிஸ்துவில்
அருட்பணி. ம. செல்வநாதன் பீரிஸ்
மன்னா பதிப்பாசிரியர்

## 1ம் பக்கத்தொடர்ச்சி
### புனித யோசேவ் வாஸ் கல்லூரியின்...

இச்சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்விற்கு மன்னார் மறைமாவட்ட ஆயர் அதிவந்தனைக்குரிய மேதகு கலாநிதி பிடலிஸ் லயனல் இம்மானுவேல் பேர்னாண்டோ ஆண்டகை அவர்களும் மன்னார் மாவட்டத்தின் அரசாங்க அதிபர் மேன்மைதாங்கிய திருமதி A. ஸ்ரான்லி டி மெல் அவர்களும் பிரதம விருந்தினர்களாகவும், கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் புனித யோசேவ் வாஸ் இறையியல் கல்லூரியின் அதிபர் பெருமதிப்பிற்குரிய அருட்பணி செரோன் சந்தன டயஸ் அவர்களும் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் கிறிஸ்தவ மற்றும் இஸ்லாமிய நாகரீகத்துறையின் தலைவரும் பேராசிரியருமான பெருமதிப்பிற்குரிய அருட்கலாநிதி ஜே. சி. போல் றொகான் அவர்களும் கௌரவ விருந்தினர்களாகவும், மன்னார் மறைமாவட்டத்தின் குருமுதல்வர் பெருமதிப்பிற்குரிய அருட்பணி பி. கிறிஸ்துநாயகம் அடிகளாரும் மடு கல்வி வலயத்தின் பிரதிக் கல்விப்பணிப்பாளரும், இவ்வலயத்தின் கட்டமைப்பு மற்றும் பொது முகாமைத்துவத்தின் இயக்குநருமாகிய பெருமதிப்பிற்குரிய திருமதி எவோன் லெறீவ் லெயான் அவர்களும் சிறப்பு விருந்தினர்களாகவும் இந்நிகழ்விலே கலந்து சிறப்பித்து வாழ்த்தினர்கள்.

இறையியலில் 03 ஆண்டுகள் கல்விகற்று உயர் டிப்ளோமா பரீட்சையிலே வெற்றிபெற்ற 11 மாணவர்களுக்கும் மேலும் ஒழுக்கவியலிலே 06 மாதங்கள் தங்களது குறுங்காலக் கற்கைநெறியை பூர்த்திசெய்த 30 மாணவர்களுக்கும் இச்சான்றிதழ்கள் வழங்கப்பட்டது. இலங்கை பல்கலைக் கழகத்தின் ஆணையத்தினால் எமது புனித யோசேவ் வாஸ் கல்லூரியின் கற்கைநெறி குறித்து வழங்கப்பட்டுள்ள ஒப்புதல்: இந்நிகழ்விலே தலைமையுரையும் மற்றும் விளக்கவுரையும் வழங்கிய இக்கல்லூரியின் இயக்குநர் பெருமதிப்பிற்குரிய அருட்கலாநிதி அ. கிறிஸ்ரி றூபன் பெர்னாண்டோ அடிகளார் இக்கல்லூரியால் நடாத்தப்படும் கற்கைநெறியின் பெறுமதி பற்றியும் மாணவர்கள் அடையக்கூடிய அதிஉச்சமான பலன்களைப் பற்றியும் விளக்கும் போது, ஊர்பானியான பல்கலைக்கழகத்தால் இறையியலிலே மூன்றாண்டு நிறைவிலே வழங்கப்படும் உயர் டிப்ளோமா பட்டத்தினையும், நான்காம் ஆண்டின் இறுதியிலே வழங்கப்படும் இளங்கலைமானி (B.A. in Christian Science) பட்டத்தினையும் இலங்கை பல்கலைக்கழகங்களின் ஆணையம் (UGC) ஓர் அரச பட்டப்படிப்பாக அங்கிகரித்துள்ளதால் அரச வேலை வாய்ப்புக்களைப் பெறத் தகுதி வாய்ந்த பட்டப்படிப்பாக இது அமைந்துள்ளது என்றும், இக்கற்கைநெறியினை எமது கல்லூரியிலே கற்கின்ற மாணவ மாணவிகள் தங்கள் கற்கை நெறியின் இறுதியிலே அரச பொது வேலை வாய்ப்புக்களுக்காக தோற்றிப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் பகிரங்கப்படுத்தினார்.

அத்தோடு, புதிய மாணவர்கள் இறையியல் கல்லூரியின் அலுவலகத்திலே விண்ணப்பப் படிவங்களை நேர காலத்தோடே பெற்றுக்கொண்டு, ஒவ்வொரு வருடமும் கார்த்திகை மாதத்தின் இறுதிப் பகுதியிலே இடம்பெறும் நேர்முகத் தேர்விற்கு சமூகம்தர வேண்டுமென்றும் விளக்கமளித்தார்.●

## 1ம் பக்கத்தொடர்ச்சி
### திருவிவிலிய எழுத்து, பேச்சு...

இந்நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி பி.ல.இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்களும், சிறப்பு விருந்தினர்களாக மன்னார் மறைமாவட்ட முதன்மைக்குரு அருட்பணி பி.கிறிஸ்துநாயகம் அடிகளாரும், யாழ் அமலமரித் தியாகிகள் துறவற அருட்பணியாளர் சபையின் மாகாண முதல்வர் அருட்பணி. ஜெயந்தன் பச்சேக் OMI அடிகளாரும், மன்னார் முருங்கன் மறைக் கோட்டங்களுக்கான ஆயரின் சிறப்புப் பணிக்குரு அருட்பணி ச.எமிலியானுஸ்பிள்ளை அடிகளாரும் மன்னார் வலயக்கல்விப் பணி மனையின் அபிவிருத்திக்கான உதவிக்கல்விப் பணிப்பாளர் திரு.ப.போல் அமல்ராஜ் அவர்களும், ஓய்வுநிலை வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி செபஸ்ரியம்மா அன்ரன் சோமறாஜா அவர்களும் கலந்து வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பதக்கங்களையும், சான்றிதழ்களையும் வழங்கி மதிப்பளித்தனர்.

இவ்விழாவில் உரை வழங்கிய மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி பி.ல. இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்கள் வெற்றிப்பதக்கம் மற்றும் சான்றிதழ் பெற்ற மாணவர்களின் பெற்றோரினதும், அவர்களுக்குப் பயிற்சியளித்த மறைவாழ்வுக் கல்விப் பணியாளர்களினதும், பங்குத் தந்தையர்களினதும் அர்ப்பணமிக்க செயற்பாடு களைப் போற்றியதோடு, கத்தோலிக்க திருஅவையின் சிறப்பு பொக்கிஷமாக இருப்பது திருவிவிலியம் என்றும் அதை நாம் தினம் வாசித்து, அதனைத் தியானித்து, செபித்து, அவற்றில் சொல்லப்பட்டிருப்பவைகளின்படி வாழும் போதுதான் நமது கிறிஸ்தவ வாழ்வு முழுமை பெறுகின்றது என்றும், எனவே நாம் திருவிவிலியத்திற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்றும் கூறினார்.

> "கத்தோலிக்க திரு அவையின் சிறப்பு பொக்கிசமாக இருப்பது திருவிவிலியம்"

இப்போட்டிகள் பங்கு மட்டம், மறைக்கோட்ட மட்டம், மறைமாவட்ட மட்டம், தேசிய மட்டம் என்னும் அடிப்படையில் நடாத்தப்பட்டது. இரண்டு பிரிவுகளாக நடைபெற்ற இப்போட்டியில் கலந்துகொண்ட மாணவர்களில் 565 மாணவர்கள் தேசிய மட்டத்திலான பதக்கங்களையும் சான்றிதழ்களையும் பெற்றுக் கொண்டனர். இவற்றோடு தேசியப் போட்டிகளில் 95 மதிப்பெண்களைப் பெற்ற மாணவர்களைப் பயிற்றுவித்த ஆசிரியர்களுக்கும் சான்றிதழும் பணப் பரிசும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். இச் சிறப்பு நிகழ்வுக்கான அனைத்துப் பணிகளையும் மறைவாழ்வுக் கல்விப் பணியாளர்கள் ஒருங்கிணைத்து முன்னெடுத்துச் சென்றனர்.●

## துயர் பகிர்கின்றோம்



கடந்த 25.04.2023 அன்று திருக்குடும்ப கன்னியர் சபையைச் சேர்ந்த அருட் சகோதரி ஏஞ்சலஸ் சவரிமுத்து தனது 95வது வயதில் இறைபத மடைந்தார். அவரது ஆன்மா இறைவனில் இளைப்பாற நாம் இறைவனைப் பிரார்த்திக் கின்றோம்.●

## ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்

காலத்திற்குப் பொருத்தமான ஆக்கங்களைச் சுருக்கமாகவும், கருத்தாழமிக்கதாகவும் எழுதி அனுப்புங்கள். தரம்கண்டு மன்னாவில் பிரசுரிப்போம்
- மன்னா நிர்வாகம் -

## துறவற வாழ்வின் வெள்ளிவிழா காணும் அருட்சகோதரி ஜெயபற்றிசியா



துறவற வாழ்வின் 25 ஆண்டுகளை நிறைவு செய்து வெள்ளி விழா காணுகின்றார் அருட்சகோதரி பாவிலுப் பிள்ளை ஜெயபற்றிசியா.

இவர் செட்டியார் கட்டையடம்பனைச் சேர்ந்த லோ. பாவிலுப்பிள்ளை சூசையானாள் ஆகியோருக்கு 2வது மகளாகப் பிறந்தவர். இவர் தனது முதலாவது அர்ப்பண வாக்குத் தத்தத்தை 1998ஆம் ஆண்டு 2005ஆம் ஆண்டு நித்திய வாக்குத்தத்தமும் பெற்றுக்கொண்டார். அருட்சகோதரி அவர்களுக்கு எமது மன்னார் மறைமாவட்டம் சார்பாக செபங்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.●

## மன்னார் மறைமாவட்ட திருவழிபாட்டு நாட்காட்டி

### ஆனி 2023

01. புதுதமை மாதா திருவிழா - காஞ்சிரங்குளம், சேமமடு
03. பாம்புவழிகாட்டி புனித அந்தோனியார் திருவிழா - சிற்பிஆறு (தேவன்பிட்டி)
04. மறைமாவட்ட அன்பிய தினம்
- குழந்தை இயேசு திருவிழா - தேக்கம்
- புனித நீக்கிலார் - வாழ்க்கைப்பெற்றான்கண்டல்
- சகாய மாதா திருவிழா - கல்நாட்டினகுளம்
06. புனித அந்தோனியார் திருவிழா - நரிகலைச்சான்
11. திருஇருதய ஆண்டவர் திருவிழா - மரக்காரம்பளை புதிய வேலர் சின்னக்குளம்
திருஉடல் திருஇரத்தப் பெருவிழா - கீரி (எழுத்தூர்), யோசப்வாஸ்நகர்.
13. புனிதஅந்தோனியார் திருவிழா - தள்ளாடி, இறம்பைக்குளம், வவுனியா, செட்டிகுளம், சுவாமித்தோட்டம், பிடாரிக்குளம், வடகாடு, துவாரங்கேணி, உவரி, பள்ளங்கோட்டை, பொன்தீவுகண்டல், கறுக்காக்குளம், தரவன்கோட்டை, தட்சனாமருதமடு, கொக்குப்படையான், சிறுத்தோப்பு, கனகராயன்குளம், சிறுக்கண்டல், நெடுங்கண்டல், மன்னார் டிப்போ, பெரியதம்பனை, பள்ளிமுனை, அந்தோனியார்புரம், கூமாங்குளம், வேப்பங்குளம். பண்டியன்காடு, (கற்கிடந்தகுளம்), கல்மடு, குருக்கள் புளியங்குளம், திருபுரி (வஞ்சியன்குளம்)
16. திருஇருதய ஆண்டவர் திருவிழா - வேப்பங்குளம் (இலுப்பைக்குளம்), விளக்குவைத்தகுளம் (ஓமந்தை), கயவன்குடியிருப்பு, (கீளியன்குடியிருப்பு)
- அன்புக்கன்னியர் அருட்சகோதரிகள் விழா
17. புனித அந்தோனியார் திருவிழா - மூன்றுபுள்ளி (இசைமாலைத்தாழ்வு), வஞ்சியன்குளம், தீவுப்பட்டி, பாலைப்பெருமாள்கட்டு
18. புனித அந்தோனியார் திருவிழா - ஆச்சிபுரம், மணற்குளம், கோவில்குளம், விடத்தல்தீவு, பணிக்கர் புளியன்குளம், 2ம் கட்டை (மடுறோட்)
- திருஇருதய ஆண்டவர் திருவிழா - ஜிம்பிறவுண்நகர், புதிய வேலர் சின்னக்குளம்
19. புனித பிரான்சிஸ்சவேரியார்- சவேரியார்புரம்(சிலாவத்துறை)
- புனித அந்தோனியார் திருவிழா - பலகைமுனை (மாந்தை)
20. புனித அந்தோனியார் திருவிழா - ஸ்ரேசன், எருவிட்டான், சின்னப்பண்டிவிரிச்சான், லூர்துபாடு (பேசாலை)
- அருட்பணி நோபட் அடிகளாரின் நினைவு தினம் (2009)
22. புனித அந்தோனியார் திருவிழா - முதலியார்குளம் அருட்பணி விக்ரன் அவிதப்பர் அடிகளாரின் நினைவு தினம் (2015)
23. மடுத்திருப்பதியில் ஆடி திருவிழாவிற்கான நவநாள் ஆரம்பம்
- புனித அந்தோனியார் திருவிழா - மூன்றாம்பிட்டி
24. புனித அந்தோனியார் திருவிழா - சாவற்கட்டு, சிறுகட்டு (ஆட்காட்டிவெளி), பள்ளமடு செட்டியார்கட்டையடம்பன்
- அருட்பணி அன்றுசேப்கா அ.ம.தி அடிகளாரின் நினைவு தினம் (1982)
25. புனித அந்தோனியார் திருவிழா - பன்றிக்கெய்தகுளம்
- பாப்பரசர் தினம்
26. புனித சதாசகாயமாதா திருவிழா - நொச்சிகுளம் (தரணிக்குளம்)
27. புனித சகாயமாதா திருவிழா - பாரதிபுரம்
- புனித அந்தோனியார் - ஒத்த நாவலடி (பேசாலை), குறிசுட்டகுளம்
29. புனித இராயப்பர் திருவிழா - உயிலங்குளம்
- புனித இராயப்பர் திருவிழா - முறியாகுளம்
30. திருஇருதய ஆண்டவர் பெருவிழா - பரிகாரிகண்டல்

## 2023ம் ஆண்டிற்கான திருத்தந்தையின் செபக்கருத்துக்களில் வைகாசி மாதத்திற்கானது

**திருச்சபையிலுள்ள அமைப்புக்கள் குழுக்களுக்காக**

திருச்சபையிலுள்ள அமைப்புக்களும் குழுக்களும் தமது பணிநோக்கினை (Charism) உலகிலுள்ள தேவைகளுக்காக அர்ப்பணித்து, நாள்தோறும் தமது நற்செய்தி அறிவிப்பு பணியை கண்டுக்கொள்ள மன்றாடுவோம்.●

## மன்னாவுக்கு பணம் அனுப்பும் விபரம்

வங்கியின் பெயர் : Hatton National Bank Ltd, Mannar
பணம் பெறுபவர் பெயர் : The Editor, 'MANNA'
வங்கிக் கணக்கு இலக்கம் : S/A No. 020020029782

# செய்திகள்

## இலங்கை கத்தோலிக்க இளையோர் ஒன்றியத்தின் 79வது தேசிய இளைஞர் சம்மேளன மாநாடு



யாழ் மறைமாவட்டத்தில் பண்டத்தரிப்பு தியான இல்லத்தில் கடந்த 15.04.2023 அன்று இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் இளைஞர் பணிக்காக நியமிக்கப்பட்ட கொழும்பு துணை மறைமாவட்ட ஆயர் பேரருட் கலாநிதி அன்ரன் ரஞ்சித் ஆண்டகை தலைமையில் ஆரம்பமானது. குறித்த தேசிய இளைஞர் சம்மேளனத்தில் இலங்கையின் 12 மறைமாவட்டங்களையும் உள்ளடக்கி பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். யாழ் மறைமாவட்ட ஆயர் மேதகு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை, இலங்கை கத்தோலிக்க இளையோர் சம்மேளனத்தின் இயக்குநர் அருட்தந்தை கலனபீரிஸ் அடிகளார் மற்றும் மறைமாவட்டங்களில் உள்ள இளைஞர் பணிக்கு பொறுப்பாக உள்ள அருட்தந்தையர்களும் கலந்துகொண்டனர். இதில் இலங்கையின் பல பாகங்களில் இருந்தும் சுமார் 120 தமிழ், சிங்கள இளைஞர்கள் கலந்துகொண்டிருந்தனர்.●

## அருட்பணி அமரர் கிளி கருணாரெட்ணம் அடிகளாரின் 15ம் ஆண்டு நினைவேந்தல்



தமிழ் மக்களின் மனதில் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கும் படுகொலை செய்யப்பட்ட அருட்பணி அமரர் கிளி கருணாரெட்ணம் அடிகளாரின் 15ம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு 20.04.2023 அன்று வவுனிக்குளத்தில் அன்னை வேளாங்கண்ணி ஆலயத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் யாழ் மறைமாவட்ட ஆயர் ஜஸ்ரின் பேனாட் ஞானப் பிரகாசம் ஆண்டகை அவர்களினால் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. இந்நிகழ்வில் கொழும்பு, யாழ், கிளிநொச்சி, முல்லை, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை உள்ளிட்ட பல மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்சகோதர, சகோதரிகள், அருட்தந்தையர்கள், இறைமக்கள் என பலரும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.●

## வவுனியா மறைக்கோட்ட இளைஞர், யுவதிகளுக்கான செபமாலை பவனி

மரியன்னைக்கு சிறப்பாக ஒப்புக்கொடுக்கப்பட்ட சிறப்பான இவ் வைகாசி மாதத்தில் கத்தோலிக்க இளையோர் ஒன்றிணைவில் அன்னையின் புகழ் விளங்க செபமாலை பேரணி பக்தி முயற்சி இடம்பெற்றது. வவுனியா மறைக்கோட்டத்தில் உள்ள சகல கத்தோலிக்க இளைஞர் யுவதிகளுக்குமான மாபெரும் செபமாலை பேரணியானது கடந்த 14.05.2023 ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணியளவில் வேப்பங்குளம் புனித சூசையப்பர் ஆலயத்தில் ஆரம்பமாகி இறம்பைக்குளம் புனித அந்தோனியார் ஆலயத்தில் நிறைவடைந்தது. இறுதியில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. இந்நிகழ்வை வவுனியா மறைக்கோட்ட முதல்வர் அருட்பணி அலெக்சாண்டர் ஆரோக்கியம் அடிகளார் மற்றும் மறைமாவட்ட இளைஞர் ஆணைக்குழு இயக்குநர் பெருமதிப்பிற்குரிய விக்ரர் சோசை அடிகளாரும் இணைந்து ஒழுங்குபடுத்தியிருந்தார்கள். இச்செபமாலை பவனியில் வவுனியா மறைக்கோட்ட இளையோர் கலந்துகொண்டு மரியன்னையின் பரிந்துரையினையும் ஆசீரையும் பெற்றுக்கொண்டனர்.●

## பேசாலை பாடசாலையின் பெயர்ப்பலகை திறப்பு விழா




கடந்த 12.05.2023 அன்று பேசாலை பாடசாலையில் "வெற்றி நட்சத்திரம் 99" நண்பர்கள் அமைப்பினரால் அமைக்கப்பட்ட பெயர்ப்பலகை திறப்புவிழா வெகு விமரிசையாக நடைபெற்றது. இதற்கு பாடசாலையின் முன்னாள் அதிபர் அருட்சகோதரி பெல்சியா அவர்களும் பேசாலைப்பங்கின் பங்குத்தந்தை ஞானப்பிரகாசம் அடிகளார் அவர்களும் அருட்பணி டேவின் IVD அடிகளாரும் கோட்டக்கல்வி பணிப்பாளர் திரு சந்தியோகு அவர்களும், மன்னார் பிரதேச சபை செயலாளர் திருமதி லுமினா செல்வராஜ் குருஸ் மற்றும் பெற்றோர்களும் சமூகம் அளித்திருந்தனர்.●

## தாஸ்கோட்டம் குழந்தையேசு ஆலய திருச்சுரூப அர்ச்சிப்பு





கடந்த 23.04.2023 அன்று வேப்பங்குளம் தாஸ்கோட்டம் குழந்தையேசு ஆலயத்தின் முன் குழந்தையேசு திருச்சுரூபம் அர்ச்சிக்கப்பட்டு வைக்கப்பட்டது. பங்குத்தந்தை அருட்பணி அலெக்சாண்டர் ஆரோக்கியம் அடிகளார் தலைமையில் உதவி பங்குத்தந்தை அருட்பணி ஜெஸ்மன்ராஜ் அடிகளார், அருட்சகோதரிகள் தாஸ்கோட்டம் ஆலய இறைமக்கள் இணைந்து குழந்தையேசு திருச்சுரூபத்தை நம்பிக்கையோடு ஆலய முன்றலில் வைத்தார்கள்●

**மன்னாவை அறிமுகம் செய்யுங்கள்**

உள்நாட்டில் அல்லது வெளிநாட்டில் இருக்கும் உங்கள் உறவினர் மற்றும் நண்பர்கள் மன்னாவைப்பெற வழிசெய்யுங்கள். ஒருவருடத்திற்கான உள்நாட்டுச் சந்தா ரூபா. 1600/=, வெளிநாட்டுச்சந்தா ரூபா. 6000. எம் மன்னா வாடிக்கையாளர்களே உங்கள் சந்தாக்காலம் முடிவடையும் முன்னதாக உங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளுங்கள்.

# சிறப்புப் பக்கம்

## மிசறியோ நிதியுதவியுடன் கறிராஸ் வாழ்வுதயத்தின் சூழல் பாதுகாப்புப் பிரிவினால் சித்திரை மாதத்தில் முன்னெடுக்கப்பட்ட செயற்பாடுகள் வருமாறு

MISEREOR
IHR HILFSWERK

**தனிநபர் உடற்சுகாதாரம் தொர்பான கருத்தமர்வு,**

மேற்படிக் கருத்தமர்வானது 21.04.2023 இன்று காலை 9.30 மணி தொடக்கம் 12.30 மணிவரை வாழ்வுதயம் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. வாழ்வுதயம் சூழல் பாதுகாப்புப் பிரிவினால் ஒழுங்குசெய்யப்பட்டது. வைத்தியர் ஜோய்



அவர்களினால் இக்கருத்தமர்வானது முன்னெடுக்கப்பட்டது. தற்காலத்தில் சிறியோர் தொடங்கி முதியவர்கள் வரை முகம் கொடுக்கும் உடற்சுகாதாரப் பிரச்சனைகள், அவற்றுக்கான காரணங்கள், அவற்றை தவிர்த்துக் கொள்வதற்கான செயற்பாடுகள் எனப் பலவிடயங்கள் இக்கருத்தமர்வில் பகிர்ந்துகொள்ளப்பட்டன. சவுத்பார், கீரி, வேப்பங்குளம், காத்தாங்குளம், மடுறோட் ஆகிய இலக்குக்கிராமங்களைச் சேர்ந்த பெற்றோர், இளையோர், வாழ்வுதயப் பணியாளர்கள் என 54 பயனாளிகள் பங்குபற்றிப் பயன்பெற்றுக்கொண்டனர்.

**புகைப்படக்கலைப் பயிற்சிநெறி**

மூன்றுநாள் புகைப்படக்கலைப் பயிற்சிநெறியானது வாழ்வுதயம் சூழல் பாதுகாப்புப் பிரிவினால் திங்கள் (24.04.2023) காலை 10.00 மணிக்கு வாழ்வுதயம் கேட்போர் கூடத்தில் ஆரம்பமானது. இலக்கு கிராமங்களான



வேபங்குளம், சவுத்பார், காத்தான்குளம், மடுறோட் ஆகியவற்றின் இளைஞர் யுவதிகளும், சில ஊடகவியலாளர்களும், வாழ்வுதயப் பணியாளர்களும் கலந்து பயன்பெற்றுக்கொண்டனர்.

அஸான் டெக்நொலஜிஸ்ட் நிறுவனத்தினால் ஆரம்பிக்கப்பட்ட இப்பயிற்சியானது புகைப்படக்கருவிகள், அவற்றின் செயற்பாடுகள் பற்றியும், புகைப்பட நுட்பங்கள், ஆவணப்படுத்தல், குறும்படம் முதலான பல விடயங்களை



உள்ளடக்கியதாக அமைந்தது. இன்று 26.04.2023 புதன் கிழமை மாலை 4.00 மணியளவில் நிறைவை எய்தியது.

**மரம் நடுகை**

மன்.வேப்பங்குளம் முஸ்லீம் மகாவித்தியாலயத்தில் தரம் 9.10,11 மாணவ மாணவிகளுக்கான சூழல் பாதுகாப்பு விழிப்புணர்வும், மரம் நடுகை நிகழ்வும் இடம்பெற்றது. 'சூழல் வெப்பமாதல் நிகழ்விற்கு மரங்களை அழிப்பதும் பாரிய செல்வாக்கினைச் செலுத்துவதால் மரங்களை நடுவதும், மரங்களைப் பாதுகாப்பதும் காலத்தின் கட்டாயம்' என்ற கருப்பொருளில் வனப்பாதுகாப்பு அதிகாரி திரு.ச.வினோத் டபரேரா அவர்களின் கருத்துரை விசேட அம்சமாக அமைந்தது.

**பறவைகள் சரணாலயம் துப்பரவுப் பணி**

வங்காலை பறவைகள் சரணாலயம் வரலாற்று முக்கியத்-துவம் வாய்ந்த இடமாக பிரகடனப்படுத்தப்பட்டிருந்தாலும் மக்கள் தம் அறியாமையினால் பிளாஸ்ரிக்-பொலித்தீன் ஆகிய




கழிவுப் பொருட்கள் இவ்விடங்களில் எறியப்பட்டு பறவைகள், விலங்குகளின் இருத்தலுக்கும், உயிர் வாழ்தலுக்கும் அச்சுறுத்தலாக அமைவதால் வாழ்வுதயம் அரச அதிகாரிகளின் ஒத்துழைப்புடனும், இலக்கு கிராம இளைஞர் யுவதிகளின் ஒத்துழைப்புடனும் துப்பரவுப் பணி மேற்கொள்ளப்பட்டது.●

# உலகத் திருஅவைச் செய்திகள்

## குடும்ப செபமாலை நம்பிக்கை மற்றும் மகிழ்ச்சியின் ஊற்று – திருத்தந்தை பிரான்சிஸ்



அன்னையின் வணக்கமாதமாகிய இம் மேமாதத்தில் தினந்தோறும் குடும்பத்தில் செபமாலை செபிப்பதனால் நம்பிக்கை மகிழ்ச்சி ஆகியவை ஒருபோதும் வெளியேறாது என்று வலியுறுத்தி நம்பிக்கை மற்றும் மகிழ்ச்சியின் ஊற்று குடும்ப செபமாலை என்ற மையக்கருத்தில் தன் டுவிட்டர் பக்கத்தில் குறுஞ்செய்தி ஒன்றினைப் பதிவிட்டுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

மே 6 சனிக்கிழமை குடும்பத்தில் செபமாலை செபிக்கும் பழக்கத்தை வலியுறுத்தி ஹேஸ்டாக் புனித செபமாலை என்ற தலைப்பில் பதிவிட்டுள்ள குறுஞ்செய்தியில் இவ்வாறு தன் கருத்துக்களைத் தெரிவித்துள்ளார். அன்றாடம் குடும்பத்தில் செபமாலை செபிப்பதனால் நம்பிக்கை, மகிழ்ச்சி என்பவை வெளியேறாது, மாறாக கடவுளோடு ஒன்றிணைந்து இருப்பவரின் வாழ்வில் இருந்து அந்த நம்பிக்கையும் மகிழ்ச்சியும் வெளிப்படும் என்று குறிப்பிட்டிருந்தார்.

## Christological உடன்படிக்கையின் 50வது ஆண்டு புத்தக வெளியீடு



1973 ஆம் ஆண்டு மே 9-13 வரை, திருத்தந்தை புனித ஆறாம் பவுல் மற்றும் முதுபெரும்தந்தை மூன்றாம் ஷெனௌடா ஆகியோருக்கு இடையே நடந்த வரலாற்றுச் சிறப்புமிக்க சந்திப்பின் ஐம்பதாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இப்புத்தகம் வெளியிடப்பட உள்ளது. திருஅவை முழு ஒற்றுமையை நோக்கித் தொடர்ந்து பயணிக்கும் போது, எப்போதும் முன்னோக்கிப் பார்ப்பது மிகவும் முக்கியம் என்றும், திருத்தூதர் பவுலைப் போலவே, கடந்ததை மறந்துவிட்டு, முன்னிருப்பதைக் கண்முன்கொண்டு (பிலி 3:13), முன்னோக்கிச் செல்ல வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ். திருத்தந்தை மற்றும் கப்டிக் ஓர்த்தடாக்ஸ் முதுபெரும்தந்தை தவட்ரோஸ் அவர்கள் இணைந்து முன்னுரை எழுதியுள்ள இப்புத்தகமானது இரண்டாம் வத்திக்கான் சங்கத்திற்குப் பிறகு கத்தோலிக்க திருஅவைக்கும் கப்டிக் ஓர்த்தடாக்ஸ் தலத்திருஅவைக்கும் இடையிலான நல்லுறவுக்கு சாட்சியமளிக்கும் முக்கிய ஆவணங்களை எடுத்துரைக்கின்றது.●

## மேய்ப்புப் பணியில் முன்னோக்கிச் செல்லுங்கள் – திருத்தந்தை



இளையோருக்கு நிலையான சான்றுகள் தேவைப்படுகின்றன என்று தனது திருத்தூதுப் பயணத்தின்போது ஹங்கேரிய இயேசு சபையாளர்களிடம் திருத்தந்தை பிரான்சிஸ் கூறியுள்ளார்

கடந்த 10.05.2023 சனிகிழமையன்று, ஹங்கேரியின் புடாபெஸ்ட் நகரிலுள்ள திருப்பீடத்தூதர் இல்லத்தில் தனது இயேசு சபைத் தோழர்களைத் திருத்தந்தை அவர்கள் சந்தித்தபோது அவர்களுடன் நிகழ்ந்த கலந்துரையாடலில் இவ்வாறு கூறியுள்ளதாக 'La Civiltà Cattolica' என்ற இயேசு சபை பத்திரிகை வெளியிட்டுள்ளது. இச்சந்திப்பின் போது கேள்விகள் பரந்துபட்ட அளவில் இருந்தபோதிலும், பலர் இளைஞர்கள் மற்றும் இளங்குருமடத்தில் உள்ளவர்களுக்கு எவ்வாறு சரியாகப் பணியாற்றுவது என்பது குறித்து கேள்விகள் எழுப்பியுள்ளனர்.

இளையோருக்கு எவ்வாறு பணியாற்றுவது என்று எழுப்பப்பட்ட கேள்விக்கு, ஒரு நிலையான முன்மாதிரியான சான்று வாழ்வை இளையோருக்கு வழங்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய திருத்தந்தை அவர்கள், இளையோரை உருவாக்கும் பயிற்சியில், குழந்தைகளிடம் பேசுவதைப்போல அல்ல, பெரியவர்களிடம் பேசுவதைபோல் அவர்களிடம் பேசவேண்டும் என்று சுட்டிக்காட்டிய திருத்தந்தை அவர்கள், புனித இனிகோவின் ஆன்மிகப் பயிற்சிகளின் சிறந்த ஆன்மிக அனுபவத்தை அவர்களுக்கு அறிமுகப்படுத்த வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

மன்னிக்க முடியாத பாலியல் முறைகேடு செய்த ஒருவரை எதிர்கொள்ளும்போது, அவரிடத்தில் கடவுளின் பரிவிரக்கத்தை எவ்வாறு வெளிப்படுத்தி வாழ்வது என்ற கேள்விக்குப் பதிலளித்த திருத்தந்தை, பாலியல் முறைகேட்டில் ஈடுபடுவர்கள் உட்பட அனைவருக்கும் கடவுளின் பரிவிரக்கம் நிறைந்த அன்பு இருக்கிறது என்றும், எப்படியிருப்பினும், அவர்களுக்குத் தேவையான தண்டனைகளை வழங்குவதன் வழியாக இது ஒப்புரவாக்கப்பட வேண்டும் என்பதையும், ஒரு சகோதரனைத் திருத்துவது போல் அவர்கள் திருத்தப்பட வேண்டும் என்பதையும் எடுத்துரைத்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.●

# இம்மாத புனிதர்கள்


## புனித டோமினிக் சாவியோ வைகாசி 06



வடஇத்தாலியில் கி.பி 1842இல் முரியால்டோ நகரில் தோன்றிய டோம்னிக் புனித டொன்பொஸ்கோவின் முதல் மாணவர்களில் ஒருவர். இவரது குடும்பத்தில் இவரின் குழந்தைப்பருவ முதல் புனிதத்தில் வளரும் சூழ்நிலை எப்பக்கத்தில் திரும்பினாலும் நிலவியது. மிக இளவயதிலிருந்தே காற்றோ, குளிரோ, மழையோ எதையும் பொருட்படுத்தாமல் அதிகாலை 5 மணிக்கே ஆலயம் செல்வதும், தவறாது பூசைக்குதவி செய்வதும் இயல்பாகவே அவருக்கு இருந்த ஆசை. இது அவரது ஆன்மீகத்தின் ஆழத்தை வெளிக்கொணர்ந்தது. டோமினிக் என்ற இளைஞர் ஓர் இளைஞர் தமது திருமுழுக்கு நாளன்று பெற்றுக்கொண்ட புனிதத்தைப் பழுதின்றிக் காப்பாற்றத் தெரிந்து கொண்டவர். இவர் உண்மையிலேயே ஒரு புனிதர் என்று குறிப்பிட்டார் திருத்தந்தை 10ஆம் பத்திநாதர். தூய்மை, பக்தி, ஆன்மவேட்கை இம்மூன்றினின்றும் இவர் அடைந்த ஆற்றல் இவரது கிறிஸ்தவ வாழ்வுக்கு ஊற்றுக்கண்ணாக அமைந்தது என்று 11ஆம் பத்திநாதர் குறிப்பிடுகிறார்.

09.03.1857 அன்று இவர் இறக்கும் வேளையில் ஈகா என்ன இன்ப மயமான அற்புதக் காட்சி என்று விண்ணக காட்சி பற்றிப் பரவச வார்த்தைகள் கூறி உயிர் துறந்தார். திருத்தந்தை 12ஆம் பத்திநாதர் இந்த இளைஞருக்குப் புனிதர் பட்டம் அளித்த போது இந்த 15 வயது இளைஞர் டோமினிக் சாவியோவைப் பீடங்களில் ஏற்றலாம் என்று இத்திருச்சடங்கு மூலம் பிரகடனப்படுத்துவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன் என்றார். தீய சக்திகள் காட்டுத்தீ போல பரவிக் கொண்டிருக்கும் இக்கால கட்டத்தில் புனிதத்தை இளம் உள்ளங்களிலிருந்து கருவறுப்பது மட்டுமன்றி நஞ்சையும் புகுத்திக் கொண்டிருக்கின்ற சூழ்நிலையில் சாவியோவின் புனித வாழ்க்கை நம் இளைஞர்களுக்கு அறைகூவலாக அமையட்டும்.●

## சாலையோர மாதா வைகாசி 24



இத்தாலியன் மொழியில் "மடோநாடெல்லா ஸ்ட்ராடா" என்று அழைக்கப்படும் சாலையோர மாதாவின் மீது இயேசு சபையினருக்கு என்றுமே ஒரு தனி பக்தி உண்டு. இயேசு சபையினரின் முதல் ஆலயம் என்பதனாலும் இந்த ஆலயத்தை மையமாகக் கொண்டே புனித இஞ்ஞாசியாரும் அவர் தம் தோழர்களும் தங்களது ஆன்மீகத் தொண்டில் ஈடுபட்டனர் என்பதனாலும், இந்தச் சிற்றாலயம் இன்று வரை தனிச்சிறப்புப் பெற்று வந்துள்ளது. கி.பி 1538 டிசம்பர் முதல் 1539 மே வரை உரோமையிலும் சுற்று வட்டாரங்களிலும் கடுங்குளிரும், உணவுப் பற்றாக்குறையும் மக்களை வாட்டின. புனித இனிகோ தம் சக குருக்களுடன் 3000 மக்களின் துயர்நீக்கி உணவும், உடையும் அளித்து வந்தார். இந்தத்தொண்டு தந்தை பீற்றர் கொடாசியோவின் நெஞ்சை நெகிழ வைத்தது. அவர் ஒரு மாத ஆன்மீகப் பயிற்சிகளில் ஈடுபட்டு இறுதியில் கி.பி 1539ல் இயேசு சபையில் சேர்ந்தார். இவர்தம் இயேசு சபையில் முதல் இத்தாலியர். இவர் மூலம்தான் சட்ட ரீதியாக சாலை ஓர மாதா ஆலயம் இயேசு சபைக்குக் கிட்டியது.●

## புனித முதலாம் யோவான் வைகாசி 18



இவர் தான் முதன்முதலாக கொன்ஸ்டான்டிநோபிள் நகரில் ஒரு தூதுவராக காலடி எடுத்து வைத்த பாப்பரசர். உரோமையில் திருத் தந்தையாக இருந்த போது ஆரியப் பதிதச் சார்புடைய முதல் தியோடரிக், இத்தாலி நாட்டை ஆட்சி செய்தான். கொண்ஸ்டான்டிநோபிளில் இருந்த ஆரியபதிதர், அந்நகரத்து மன்னன் முதல் ஜஸ்டினால் கொடுமைப் படுத்துகின்றனர். என்று கேள்வியுற்று தியோடரிக் திருத்தந்தையை அனுப்பி ஆரியப் பதிதரை ஜஸ்டின் அன்புடன் நடத்துமாறு தூதுவிடுத்தான். திருத்தந்தை இப்பணியை நிறைவேற்றிய பின் இத்தாலி வந்தடைந்தார். அப்போது மன்ன் தியோடரிக்குக்கு ஒரு பெரும் ஐயம் எழுந்தது. மன்னன் ஜஸ்டினும் திருத்தந்தை ஜானும் தனக்கெதிராகச் சதித்திட்டம் தீட்டுவதாக எண்ணினான். அதன் விளைவாக இதில் உடந்தையாய் இருந்ததாக ஐயங்கொண்டு முதலில் பொயித்தியஸ் என்பவரைக் கொன்றான். பிறகு ரவென்னா நகரில் திருத்தந்தையைச் சிறையிலிட்டான். அங்கே அவர் அனுபவித்த கொடிய வேதனைக்குப்பின் உயிர்நீத்தார். மன்னன் தியோடரிக்குச் சில நாட்களுக்குப்பின் இறந்தான். ஆனால் தான்தோன்றித்தனமாக ஒரு திருந்தந்தையை நியமனம் செய்துவிட்டே இறந்தான்.●

## புனித பாஸி மரிய மதலேனம்மாள் வைகாசி 25



இந்தத் தூய்மையின் வடிவம் இத்தாலி நாட்டில் புளோரன்ஸ் நகரில் உயர்ந்த குடியில் தோன்றியவர். இளமையிலேயே திவ்விய நற்கருணை மீது மிகுந்த பக்தி கொண்டிருந்தார். அதோடு தனது கன்னிமையை இறைவனுக்கு ஒப்புக் கொடுத்திருந்தார். தமது 16ஆம் வயதில் கடுந்தவ முயற்சிகள் நிறைந்த கார்மேல் மடத்தில் சேர்ந்தார். துறவற வாழ்வில் நெடுநாட்களாய் இறைவன் அனுப்பிய பெரிய சிலுவையாகிய ஆன்ம இருளை இவர் சுமக்க வேண்டியிருந்தது. இறைவனால் முழுவதும் கைவிடப்பட்டது போல் உணர்ந்தார். 50 ஆண்டுகள் வரை இவ்வாறு பேயினால் துன்புறுத்தப்பட்டார். இருந்தாலும் சவுக்கினால் தம்மையே கடுமையாக அடித்துக் கொள்வார். தாழ்ச்சி நிரம்பியவராகப் பேயின் கடுமையான தாக்குதலை எல்லாம் எதிர்த்து நின்றார். இதன் வழியாக இறைவனிடமிருந்து மீண்டும் அமைதியைப் பெற்றுக்கொண்டார். அதன் பிறகு அடிக்கடி இயேசு அவர்முன் தோன்றுவார். திருப்பாடுகள் அனுபவித்த ஆண்டவரின் காட்சி இவருக்கு 16 ஆண்டுகளாக நிடித்தது. அதோடு இவர் ஆண்டவரின் ஐந்து திருக்காயங்களும் தமது உடலில் பதிந்திருக்கும் பேறுபெற்றிருந்தார்.●

## சிறப்புப் பக்கம்

# வந்ததே வணக்க மாதம்

எமிலியானூஸ் அற்புதராணி,
யோசப்வாஸ்நகர்

ஆண்டவரை எனது உள்ளம் போற்றிப் பெருமைப் படுத்துகின்றது. என் மீட்பராம் கடவுளை நினைத்து எனது மனம் பேருவகை கொள்கிறது. லூக் 1:46 செபவாழ்வில் ஆழம்பெற இறை உறவில் நாம் வளர திருச்சபையானது பல முயற்சிகளைக் கற்றுத் தந்துள்ளது. அவற்றில் முன்னணியில் இருப்பது செபமாலைப் பக்தி முயற்சியாகும்.

வைகாசி மாதமென்றால் எம் எல்லோருக்கும் மகிழ்ச்சியான மாதமாகும். ஏனென்றால் வைகாசி மாதம் முழுவதும் மரியன்னையின் பக்கத்தில் இருந்து செபமாலை சொல்ல அழைக்கப்பட்டுள்ளோம். செபம் செய்யுங்கள் தவம் செய்யுங்கள். மனம் மாறுங்கள் என்று அழைப்பு விடுக்கும் மரியன்னை தனது அருள் வரங்களால் எம்மை நிரப்புகின்றாள் அருள்மிகப் பெற்றவரே வாழ்க என்ற உன்னதமான செபத்தை நாம் செபிக்கின்ற வேளையில் எல்லாம் நாம் மரியன்னையின் அருளைப் பெறுகின்றோம்.

யேசுவின் தாய் அவரை நோக்கி திராட்சை ரசம் தீர்ந்து விட்டது. (யோவா 2:3) கானாவூர்த் திருமண வீட்டில் குறைபோக்க யேசுவிடம் பரிந்துரைத்த அன்னை மரியாளை இந்த மாதம் முழுவதுமாக நினைத்து செபிப்போம். மாடி அறையிலே தூயஆவியின் அருட்பொழிவிற்காக மரியாளோடு சேர்ந்து செபித்த திருத்தூதர்கள் தூயஆவியைப் பெற்றுக் கொண்டார்கள். நாமும் செபிப்போம். அன்னையின் அருள்



பெறுவோம்.

மரியாளின் வாழ்த்தை எலிசபேத் கேட்ட பொழுது அவள் வயிற்றிலுள்ள குழந்தை மகிழ்ச்சியால் துள்ளிற்று (லூக் 1:41) பிறருக்கு உதவும் நல்ல மனம் பிறரை மகிழ்ச்சிப்படுத்தும் அன்புள்ளம் எம் மரியன்னை வாழ்வில் நாம் கண்ட நல்ல பண்புகள். அப்பண்புகளில் வளர செபிப்போம். நான் ஆண்டவரின் அடிமை உம் சொற்படியே எனக்கு நிகழட்டும் என்று இறைசித்தத்தை ஏற்று வாழ்ந்த மரியன்னையைப் போல எத்துன்ப வேளையிலும் திருச்செபமாலை சொல்லுவோம்.

1. வந்ததே வணக்க மாதம், மரியாயின் மாதமே, சந்தோஷமாய், வந்தெல்லோரும், தாயாரைப் புகழ்வீரே,
2. மோட்சவாசர், இந்த நாளில், பாக்கள் பாடித் தாயாரை, இராக்கினியாய் போற்ற, நாங்கள், எங்கள் தாயைப் போற்றுவோம்,
3. வானம், பூமி நாடு காடு, ஆனவைகள் யாவுமே, ஞானக்கன்னி ஸ்தோத்திரம், பாட நாம் பாடாதிருப்போமோ

இந்தப் பாடல் வரிகள் அன்னையின் புகழைச் சாற்றுகிறது.

இம்மாதம் முழுவதும் குடும்பமாக ஒன்றிணைந்து செபிப்போம். குடும்பங்கட்காய் நாட்டிற்காய் நோயுற்றோர்க்காய், சிறைப்பட்டோர்க்காய், வேதனையில் இருப்போர்க்காய், இழப்புக்களைச் சந்தித்திருப்போர்க்காய் செபிப்போம்.

இம்மாதம் 31ம் திகதி மரியாள் எலிசபேத்தம்மாளை சந்தித்த விழாவைக் கொண்டாட இருக்கின்றோம். மரியாள் எலிசபேத்தம்மாளைச் சந்தித்த போது வாழ்த்திய சமாதானமும் யேசுவின் பிரசன்னத்தில் திருமுழுக்கு யோவான் ஜென்ம பாவக்கறை கழுவப்பட்டு தூய்மையடைந்தது போல நம்முடைய வாழ்க்கையிலும் பரிசுத்தம் நிறைய இந்நாட்களில் மன்றாடுவோம்.

நாம் விண்ணக வீட்டையடைய எமக்கு கொடுக்கப்பட்ட ஆயுதம் திருச்செபமாலை தனியாக, குடும்பமாக, குழுவாக திருச்செபமாலை சொல்வோம். ஒரு செபமாலையல்ல 53 மணிச் செபம் சொல்வோம்.

**மரியே வாழ்க..!**

# வைகாசிப் பூக்கள்



புத்தாடை அணிந்து
புறப்பட்டிருக்கும் பூக்களே!
ஓ! இது பூக்களின் மாதம்!
மண்ணுக்குள்ளிருந்து
பூவாகவே வெளிவருகிறீர்களே
வைகாசி வந்தவுடன்
என்ன ஒரு அழகு!
மாதாவின் மாதம் இது என்பதாலா
இந்த மலர்ச்சி?
மலர்ந்திடுங்கள்
வணக்க மாதத்தை
வாழ்த்தி மகிழுங்கள்
எங்கள் மண்
மறக்க முடியாத மாதமும் இது
எங்கெல்லாம்
எங்கள் உறவுகளே உரமானார்களோ
அங்கெல்லாம் பூத்திடுங்கள் பூத்தூவுங்கள்
இது வைகாசி மாதம்
இது வைகாசி மாதம்

**ஜெயபாலாஜி — முருங்கன்**

# அன்னை மரியாள் இயற்கைகளின் மணிமகுடம்

**“தாயே நீ! கருவைச் சுமக்காமல் கருணையை சுமந்ததால் உலகிற்கெல்லாம் தாயானாய்”**

**“அன்னை மரியாள் இயற்கைகளின் மணிமகுடம் இறைவன் வரைந்த வண்ண ஓவியம் அன்னை மரியாள் ”**

அன்னை மரியா இயற்கையின் அடையாளம் எவ்வாறு எனில் பன்னிரு விண்மீன்களைச் சூடியவராக, நிலவின் மேல் நிற்பவராகக் காட்டப்படுகின்றாள். இவையே நம்மை இயற்கை சக்திகளோடு இணைக்கும் விடுதலை காவியமாக அன்னை மரியின் பக்தி உருப்பெறுகின்றது.

அன்னை மரி என்ற அற்புதக் காவியம் அக விடுதலைக்கு அடித்தளமாக அமைகிறது. ஒட்டு மொத்தச் சமுதாய விடுதலையை இலக்காகக் காட்டுகிறது. இயற்கையெல்லாம் அணிவகுக்கின்ற எழில் காவியம் அன்னை மரியா! எழில் நிலையைச் சுட்டிக்காட்டி நிறை விடுதலை வாழ்வை நிஜமாக்குகிறது!

எனவே தான் கோடை வெயிலில் கோடி நன்மை பெற மே மாதம் முழுவதும் அன்னையின் மாதமாகத் திருச்சபைக் கொண்டாடி மகிழ்கின்றது. எனவே பக்தர்களாகிய நாம் அன்னையோடு இணைந்து அவரது வாழ்வில் ஏற்படும் உண்மை விடுதலை கூறுகளை நம தாக்கி ஆரவாரமில்லாத புனித புரட்சி மாலை எனும் செபமாலை சொல்வதின் மூலம் இச்சமுதாயத்தை மாற்றியமைக்க! நாட்டில் நல்லாட்சியாக்க! இலங்கைத் தமிழர் விடுதலை சுவாசக் காற்றைச் சுவாசிக்க! இந்நவ நாள் மென்மையாக மாறும் என்ற நம்பிக்கை கீற்றை நமது உணர்வில் பதிப்போம். செபிப்போம் செபமாலை சொல்வோம். **வாரீர் இறைகுலமே! மனுக்குலமே!**

# குறைகளகற்றும் செல்வத்தாய்... அன்னை மரியாள்...!

அம்மா... என்றும்மை அழைக்கும் போது
ஆனந்தம் பொங்குதம்மா..!
தாயே என்றும்மை நினைக்கும் போது இத்
தரணியே உம் புகழ் பாடுதம்மா..!

தாயே! உம் சந்நிதிக்கு வந்தாலே — எம்
உள்ளம் சாந்தமடையுதய்யா!
தனயர் எம் வேண்டுதலை — நீர்
தயவோட கேட்டிடய்யா!

விழிநீர் நனைய உமை வேண்டி நிற்கின்றோம் - எம்
பழி பாவம் பொறுத்து எமக்கருள் காட்டிடம்மா!
அளவில்லா உம் அன்பால் எம் குறை தீர்த்திடம்மா!
அழுதிடும் எம் குரலை ஆவலோடே கேட்டிடம்மா!


குரலற்ற மக்களின் குறைகளை போக்கிடம்மா!
சிறையிலே வாடுவோரை சிறப்புடன் காத்திடம்மா
பாவச்சேற்றில் சிக்குண்டோர்க்காய் பரமனிடம் வேண்டிடம்மா!
சாவதே வழியென்றலைவோர்க்கு சகாயம் கொடுத்திடம்மா

சிதறுண்ட மந்தைகளை சிறப்பாய் காத்திடம்மா!
பதறி தவிப்போரின் பாவம் போக்கிடம்மா
துயரில் தினம் வாடுவோரின் துன்பம் நீக்கிடம்மா!
அயராது துடிப்போரின் அல்லல் தீர்த்திடம்மா

அன்னையே தாயே எம்மை நாளும் காத்திடம்மா!
ஆருயிர் செல்வமே எம்மோடிருந்திடம்மா
கறைதிரை நீக்கும் கலங்கரை விளக்கே — எம்
குறைகளை அகற்றி நிலைவாழ்வை அளித்திடம்மா!

**அ.ஜஸ்மின் ஷறோன்**
**ஆவணம், நானாட்டான்.**

# துன்பத்தில் துணைபுரியும் தாய்



கானாவூர் திருமண விழாவிற்கு சென்ற தாய் பரிவு உள்ளத்தோடு அவர்களுக்கு ரசம் இல்லாமையை அறிந்தார். ஆனால் மற்றவர்கள் போல் கண்டும் காணாதிருக்க வில்லை. யார் எக்கேடு கெட்டால் என்று தன்னலமாக மாதா இருக்கவில்லை. தன் மகனிடம் சென்றார். பரிந்து பேசி "மகனே ரசம் தீர்ந்துவிட்டது" என்றார். தன் மகன் 'என் நேரம் வரவில்லை" என்று கூறினாலும் மகன்மீது நம்பிக்கைக் கொண்ட தாய் பணியாட்களிடம் "அவர் சொல்வதைச் செய்யுங்கள்" என்கிறார். விரைந்து சென்று மலைநாடு சென்று எலிசபெத்திற்கு உதவியதும் அவரின் துன்பத்தில் பங்குகொண்டு மாதா அவருக்கு நம்பிக்கை அன்பின் தூதராய் பணியாற்றினார்.●

# பயண பாதை


## சிறுகதை

அது ஒரு அழகான கிராமம் அந்த கிராமத்தில் இளைஞர் யுவதிகள் இணைந்து சுற்றுலா புறப்பட்டார்கள். இரண்டு பங்குகள் இணைந்து தங்கள் பங்குத்தந்தையருடன் சென்றார்கள். அக்கிராமத்தில் பீற்றர், சுயிற்றா தம்பதிகளின் ஒரேயொரு மகள்தான் சுயானி அவளின் அழகிற்கு பஞ்சமே இல்லை. அவளின் அழகில் மயங்காதவர்கள் யாரும் இல்லை. மாலை 2 மணியளவில் சிவப்பு நிறத்தில் சல்வாரும் அதற்கு இசைவாக வெள்ளை, துப்பாட்டாவும் அணிந்து பின்னி முடித்த கூந்தலுடன் அன்று மலர்ந்த றோஜா பூப்போல தன் சக நண்பிகளுடன் பேருந்தில் புறப்பட்டாள். ஆட்டம் பாட்டம் என களைகட்டினார்கள். அடுத்த பங்கிற்கான தரிப்பிடம் வந்தது. அதிலும் பங்குத்தந்தை இளைஞர் யுவதிகள் ஏறினார்கள். மீண்டும் ஆட்டம் தொடங்கியது. அப்பொழுது ஏனைய பங்கிலிருந்து வந்த இளைஞர் ராம், சுயானி மீது காதல் கொண்டிருந்தான். இன்று எப்படியாவது தனது காதலை கூற வேண்டுமென முடிவெடுத்தான். அவர்கள் இறங்க வேண்டிய இடம் வந்த பொழுது ராம் சுயானியின் அருகில் வருவான் ஆனால் அவள் தனது நண்பிகளுடன் சந்தோசமாக கதைத்துக்கொண்டிருப்பாள். ராமும் அழகன் தான் அவன் பல்கலைக்கழக இறுதியாண்டு மாணவன். சுயானியிடம் தன் காதலை கூறினால் அவள் ஏதும் நினைப்பாளோ என்ற பயம்.

சுயானி இதமான மெல்லிய காற்றில் யன்னல் அருகே அமர்ந்து மனதிற்கு பிடித்தமான இசைஞானியின் பாடல்களை கேட்டுக்கொண்டு வந்தாள். அப்பொழுது அவளின் அருகில் அவளது நண்பன் வந்து மெல்லிய தொனியில் Hi என கூறினான். அவளும் பதிலுக்கு Hi என கூறி கதைத்துக்கொண்டு வந்தனர். ராமுக்கோ கோபம் வந்தது. கோபத்தை அடக்கிக்கொண்டு இருந்தார். சிறிது நேரத்தில் ராம் தனது தொலைபேசியை சுயானியிடம் நீட்டி நம்பர் Save பண்ண சொன்னான் அப்பொழுது அவளின் தொலைபேசி சார்ஜ் இல்லாமல் Off ஆகியது. ஆனால் அதற்கு முன்னரே சுயாயின் அருகில் உள்ள நண்பன் அவளது நம்பரை வாங்கி விட்டான். ராமுக்கோ இன்னும் கோபம் தலைக்கு ஏறியது. பின்னர் அவரவர் இடம் வந்ததும் ஒவ்வொருவராக இறங்கினார்கள்.

சில மாதங்கள் பின்னர் ராமும் சுயானியின் நம்பரை வாங்கி நட்புடன் பழக ஆரம்பித்து பின்னர் தன் காதலைக் கூறினான். ஆனால் சுயானியோ நான் என்னை ஒரு அருட்சகோதரியாக முழுமனதுடன் கடவுளுக்கு அர்ப்பணித்து விட்டேன். நீ வேறு பெண்ணை திருமணம் செய்து மகிழ்ச்சியாக இரு என்றும். உனது திருமணத்திற்கான அழைப்பை அனுப்பு முடிந்தால் வருவேன் என்றாள்.

**சிந்தனை:** இதுதான் வாழ்க்கை முடிந்தால் போராடுவோம்.




**A. நாதன், வதனா**
**வாழ்க்கைப்பெற்றான்கண்டல்,**
**அளவக்கை.**

## சிறப்புப் பக்கம்

# ஞாபக சக்தியும் அதனை மேம்படுத்தும் வழிமுறைகளும்

ச.ஜெயந்திமாலா - கல்னாட்டி, முருங்கன்

மனிதனாக வாழும் ஒவ்வொருவருக்கும் ஞாபக சக்தி எவ்வளவு உள்ளதோ அதே போன்று மறதியும் உள்ளது. மறதி இல்லாத மனிதன் நான் என்று யாராலும் கூற முடியாது. மறதி இல்லாவிடின் மன அழுத்தம் அதிகரிப்பதுடன் அது நமது வாழ்வைப் பயனற்றதாக நின்மதியற்றதாக மாற்றி விடும். எம்வாழ்வில் எவ்வாறு இன்பமும் துன்பமும் இரண்டறக் கலந்துள்ளதோ அதே போன்று ஞாபக சக்தியும் மறதியும் உள்ளது. எனவே எம் வாழ்க்கையில் நிம்மதி தேவையென்றால் ஞாபக மறதி நிச்சயம் தேவை. முதலில் நாம் ஞாபகசக்தி பற்றி நோக்குவோம். அதிகமானவர்கள் கூறுவார்கள் நான் எவ்வளவு தான் ஒரு விடயத்தை ஞாபகம் வைத்திருக்க முயற்சி செய்தாலும் மறந்து விடுகின்றேன் என்று. கல்வி கற்கும் மாவணர்கள் கூட முதல் நாள் கற்ற விடயங்களை ஓர் இரு வாரங்களின் பின்னர் அது தொடர்பாக வினா எழுப்பினால் புதிதாக ஒரு விடயத்தினைக் கேட்பது போல ஆசிரியர்களைப் பார்ப்பார்கள். இச்செயற்பாடுகள் அனைத்தும் ஞாபகசக்தகியுடன் தொடர்புடையது.

ஞாபக சக்தியை மூன்று வகையாக நோக்கலாம். புலன் ஞாபகசக்தி, தொழில்படு ஞாபகசத்தி, நீண்டகால ஞாபகசக்தி என்பனவாகும். ஒரு செய்தியானது நமக்குத் தெரிவிக்கப்படும் போது முதலில் நாம் எமது காதினூடாக நன்றாக செவிமெடுக்கின்றோம். அதனை அடுத்து அச்செய்தியில் எமது புலனின் செவிமெடுக்கும் தன்மையை ஆழமாகப் பதிக்கின்றோம். அதுவே புலன் ஞாபகசக்தி ஆகும். இப்புலன் ஞாபகசக்திக்கு இரண்டு விடயங்கள் மிக முக்கியமானவை. (Attraction) ஈர்ப்புத் தன்மை, (Purpose)நோக்கம் என்பனவாகும். தொலைத் தொடர்பு சாதனங்களின் பயன்பாடற்ற காலத்தில் வீட்டிலுள்ள தாத்தா தங்கள் பேரக்குழந்தைகளுக்கு கதை கூறுவார். அவர்கள் கூறும் கதைகளை மீண்டும் மீண்டும் கேட்பதற்கு குழந்தைகள் அவாக் கொள்வார்கள். அதற்குக் காரணம் பெரியவர்கள் கதை கூறும் விதமானது சிறு குழந்தைகளைக் கவர்வதாகும். சில நாட்களில் அக்குழுந்தைகள் தாங்கள் கேட்ட கதைகளைத் தாமாக கவிநயத்துடன் கூற ஆரம்பித்துவிடுவர். இன்றைய அதிநவீன காலத்தில் தொலைபேசி, தொலைக்காட்சி மற்றும் ஏனைய சமூக வலைத்தளங்களுமே தாத்தா, பாட்டி போன்று பயன்பாட்டில் உள்ளவை என்பது மறுக்க முடியாத கசப்பான உண்மையாகும். இத் தொலைத்தொடர்பு சாதனங்கள் சிறு குழந்தைகளில் ஞாபகசக்தியினை குறைவடையச் செய்வதாக பல்வேறு ஆய்வு முடிவுகளின் மூலம் தெரியப்படுத்தப் படுகின்றது. ஒரு விடயத்தினை நாம் கேட்கும்போது அதனை எமது ஆழ்மனமானது படமாக (உருவகமாக) சித்தரிக்கும் அதனால் அது அப்படியே மனதில் பதிந்து விடும். ஆனால் இத்தொடர்பு சாதனங்கள் மூலம் நாம் நேரடியாக உருவங்களைப் பார்ப்பதனால் எமது ஆழ்மனதுக்கு (உருவை) படத்தினை காட்சிகளாக சித்தரிக்க வேண்டிய அவசியம் இல்லை. அதனால் ஞாபகத்தில் வைக்கும் செயற்தன்மை குன்றி விடுகின்றது. இதுவே முன்பிருந்த குழந்தைகளுக்கும் தற்போது உள்ள குழந்தைகளுக்குமான வேறுபாடாகும்.

நாம் ஒரு விடயத்தை கேட்கும் போது அது ஏன் எனக்குச் சொல்லப்படுகின்றது? அது எனக்கு அவசியமில்லை என்று எண்ணி கூறுபவருக்கு நாம் நன்றாக செவிமெடுக்கின்றோம் என்று பாவனை செய்து செவிமெடுக்கா திருப்பதற்குக் காரணம் எமது நோக்கம் தெளிவின்மை ஆகும். எனவே எமக்கு என்று தெளிவான நோக்கம் இருக்கும் போது குறித்த சொல்லப்படுகின்ற விடயத்தில் புலன் ஞாபகசகத்தியினை ஏற்படுத்துவோம். இதன்மூலம் ஞாபக சக்தி அதிகரிக்க சந்தர்ப்பங்கள் உள்ளது. அடுத்து தொழில்படு ஞாபகசகத்தி அவ்வாறெனில் புலன் ஞாபகசக்தியில் பெற்ற தகவலை மீட்டுப் பார்ப்பது இதன் தொழிலாகும். எமது மூளையில் 7+2 தொழில்படு நினைவுத்திறன் ஸ்லொட்டாக இருக்கும். அது தான் இச்செயற்பாட்டினை மேற்கொள்ளும். எனவே நாம் எந்த விடயங்களைச் செய்தாலும் அது எமக்கு முக்கியமானது என்று எண்ணும் போது அதனை மீட்டல் செய்து பார்க்கும் போது குறித்த காலம் ஞாபகத்தில் இருக்கும். சாதாரண மனிதர்களுக்கு தொழில்படு ஞாபக சக்தி 2 ஸ்லொட்டை விடவும் குறைவாக உள்ளது. இதற்குக் காரணம் எமக்கு அவசியமான விடயங்கைள மீள ஞாபகப்படுத்திப் பார்க்காமையாகும். குறிப்பாக மாணவர்கள் பரீட்சையில் குறைந்த பெறுபேறுகளைப் பெறுவதற்குக் காரணம் கூட இது தான். அவர்கள் படித்த விடயங்களை வெறுமனே மனப்பாடம் செய்வதனால் அது ஆழ்மனதில் பதிவதில்லை. அத்துடன் அதனை மீட்டல் செய்து பார்ப்பது மிகவும் குறைவு. காரணம் பரீட்சைக்கு ஒரு வாரத்திற்கு முன் ஆயத்தம் செய்வதாகும். இதனால் மாணவர்கள் மன அழுத்தத்திற்கு உட்படுவதுடன் எவ்வினாவினை முதலில் செய்வது என்று குழப்பமடைந்து விடுவார்கள். ஆகவே அன்றன்று படித்த விடயங்களை அந்த நேரத்திலே மீட்டல் செய்து அதனை விளங்கி மனதில் பதிப்பதன் மூலம் பரீட்சையில் வெற்றி பெற முடியும்.

இச்செயற்பாட்டிற்குத் தான் நீண்ட கால ஞாபகசக்தி மிக முக்கியமாகின்றது. இதற்கு நாம் பல வழிகளைப் பயன் படுத்த முடியும். ஒரு விடயத்தினை ஒரு தடைவ மட்டும் செய்து பார்த்தால் குறித்த நாட்கள் மட்டுமே ஞாபத்தில் இருக்கும். அதனைத் தொடர்ந்து மீண்டும் மீண்டும் செய்தால் நீண்டகாலம் ஞாபகத்தில் வைத்திருக்க முடியும். நாம் தரம் ஒன்றில் செய்த விடயங்கள் படித்த பாடல்கள் இவற்றை இப்போதும் அபினயத்துடன் பாட முடியுமென்றால் அதற்குக் காரணம் அக்காலப் பருவமும் அதனை மீண்டும் மீணடும் நினைவூட்டியமையே காரணமாகும். சிறு பராயங்களில் நாம் செய்த குறும்புகள், தவறுகள் என்பவற்றை நேற்று நடந்த சம்பவம் போன்று சுவாரஸ்யமாக ஞாபகத்துடன் எப்போதும் எம்மால் கூறக் கூடியதற்கான காரணம் ஆழ்மனதில் பதிந்துள்ள ஞாபகசக்தியாகும். அதே பள்ளிப்பருவத்தில் தரம் 8, 9களில் நாம் படித்த பாடத்தினை கேட்டால் அது எமக்கு ஞாபகத்தில் உடனே வராது அல்லது சிறு சிறு விடயங்கள் மட்டும் ஓரளவு ஞாபத்தில் வரும். காரணம் என்னவென்றால் அது எமது முயற்சியில் பரீட்சைக்காக மனப்பாடம் செய்தமையாகும். எனவே நாம் கற்கும் விடயங்களை மீண்டும் மீண்டும் பயிற்சி செய்து அல்லது விளக்கம் அறிந்து நினைவில் வைக்கும் வேளையில் நீண்ட கால ஞாபக சத்தி அதிகரிக்க அதிக வாய் ப்புக்கள் உள்ளது.

மாணவர்கள் தாங்கள் கற்கும் விடயங்களை படங்களாக கற்பனையில் சித்தரித்து கற்கும் வேளையில் நீண்ட கால ஞாபகசக்தியினை ஏற்படுத்தலாம். ஒரு சில ஆசிரியர்கள் கற்பிக்கும் போது மாணவர்களுக்கு எதுவும் புரியாது தலையினை அசைத்துக்கொண்டிருப்பர். ஆனால் இன்னும் சில ஆசிரியர்கள் கற்பிக்கும் பாடங்களை மாணவர்கள் தங்களது கதாபாத்திரங்களாக கற்பனை செய ்து விளங்கிக் கொள்ளக் கூடியவாறான கற்றல் கற்பித்தல் செயன்முறையாக அமையும். இச்செயன்முறை நீண்டகால ஞாபகத்திறனை அதிகரிக்கும். மேலும் (Association) ஒன்றுடன் ஒன்று தொடர்புபடல். அதாவது ஒரு விடயத்தினை மாணவர்கள் கற்கும் போது அதனைக் கதைகள் மூலமாக, பாடல் மூலமாக அல்லது செயன்முறையின் மூலமாக என்று ஒன்றுடன் ஒன்று தொடர்புபடுத்துவதன் மூலம் ஞாபகசக்தியினை அதிகரிக்கச் செய்யலாம். எனவே, குறிப்பாக மாணவர்கள் தாங்கள் கற்ற விடயங்களை எளிதில் மறக்காதிருப்பதற்கான மிகவும் சிறந்த விடயங்களாவது: அதிகாலையில் எழுந்து படிப்பது. அதாவது அதிகாலையானது அமைதியாகவும் ஆழந்த நிம்மதியான சூழல் நிறைந்ததாகவும் இருக்கும். எந்தவித இடையூறுகளோ அடுத்தவரின் தொந்தரவோ இல்லாது இருக்கும் வேளையில் பாடங்களைக் கற்கும் வேளையில் இலகுவாக அது நம் ஆழ்மனதில் பதிந்துவிடும். இந்நேரத்தினை மாணவர்கள் வழமையான நேரமாக்கி கற்கும் வேளை அந்நாள் முழுவதுமே புத்துணர்வு மிக்கதும் உற்சாகமாதுமான நாளாக அமையும். பரந்த பாடப்பரப்பாக இருக்கும் போது அதனை முதலில் வாசிக்க வேண்டும்.

பின்பு அதனை நன்கு விளங்கி பொருளுணர்ந்து வாசித்து முக்கியமான விடயங்களை குறிப்பெடுத்துக்கொள்ளலாம். அதனை நாம் மீட்டல் செய்ய ஆரம்பிக்க முன்னம் மீண்டும் ஒரு தடவை மனம் வைத்து ஆர்வத்துடன் வாசிக்கும் போது அது எமது ஆழ்மனதில் காட்சியாக பதிந்துவிடும். அதனை ஒரு நாள் 10- 15 நிமிடங்கள் மீட்டல் செய்த பின்னர் மறுநாளும் அவ்வாறு மீட்டல் செய்ய வேண்டும். அதனைத் தொடர்ந்து ஒவ்வொரு வாரத்திலும் ஒரு நாள் அதே விடயத்தை 5- 10 நிமிடங்கள் மீட்டல் செய்ய வேண்டும். பின்னர் அதே விடயத்தினை மாதத்தில் ஒரு தடைவ 3-5 நிமிடங்கள் பின்னர் 3 மாதத்திற்கு ஒரு தடைவ என்று கற்ற விடயங்களை தொடர்ச்சியாக மீட்டல் செய்யும் வேளை நாம் கற்ற பகுதி முழுமையாக எமது மனதில் பதிந்து விடும். ஆகவே, தேவையான விடயங்களை ஆர்வத்துடனும் அவதானத்துடனும் கற்கும் வேளை எமது மூளையானது மிகவும் சுறுசுறுப்புடன் இயங்குவதுடன் இலகுவில் ஞாபகத்தில் வைத்திருக்க முடியும். அது எமது வாழ்வின் முன்னேற்றத்திக்கும் பிறரது வாழ்விற்கும் ஏதோ ஒரு விதத்தில் பயனளிக்கும். எனவே தேவையற்ற விடயங்களை மறந்து பயனுள்ள விடயங்களை மீட்டிப்பார்ப்பதன் மூலம் எமது ஞாபக சக்தி சிறப்புடையதாகின்றது. ❖❖❖❖

# கடவுளால் ஆளப்படாதவன் கடவுளை திருப்திப்படுத்தாதவன்

கி. அருளப்பு – விடத்தல்தீவு

வாழ்க்கை என்பது இறைவன் படைத்த ஓவியம் வாழ்வதென்பது மனிதன் படைத்த காவியம். இறைவன் ஓவியமாக படைத்த இந்த உலகை மனிதர்களாகிய நாம் காவியமாக மாற்றி அமைக்க கடவுள் மனிதரை தன்னுடைய சாயலாகவும் பாவனையாகவும் படைத்தார். அவர் ஓவியமாக உருவாக்கிய தன்னுடைய திருச்சபையை தனது வாழ்வினால் காவியமாக்க எம் ஒவ்வொருவரையும் அவர் அழைக்கின்றார். ஆனால் மனிதர்களாகிய நாம் அதற்கு மாறாக தமக்கென்று ஓர் உலகைப் படைக்க விரும்பு கின்றோம். மனித குலம் தமக்கென்று ஓர் அளவுகோலை வைத்துக்கொண்டு அதன் அடிப்படையில் ஓர் உலகை அமைக்க விரும்புகிறது. கிறிஸ்தவ வாழ்வு என்பது ஒரு சராசரித் தனமான சாமானிய வாழ்வு அல்ல. அது பல சவால்களை உள்ளடக்கியது. கிறிஸ்தவர்களுக்கு வாழ்வு என்பது சாதாரண தற்செயல் நிகழ்வல்ல? மாறாக அது ஒரு அழைப்பு. தனிப்பட்ட ஓர் அன்பின் கனி. கிறிஸ்தவ வாழ்வு ஓடுகின்ற தண்ணீரோடு பயணம் செய்வதல்ல? அது எதிர்நீச்சல் போடுவது, மலிவான கிறிஸ்தவம் என்று எதுவும் இல்லை. ஆண்டவர் யேசுவை முன்வைத்து தீமையையும் தன்னலத்தையும் புறக்கணித்து பேரலைகளை எதிர்த்து நீந்துவதாகும். என்னைப் பின்பற்ற விரும்புகின்றவர்கள் எப்படி எப்படியெல்லாம் வாழ வேண்டுமென்று ஓர் பட்டியலை ஆண்டவர் இயேசு தன்னுடைய நற்செய்தியிலே ஆங்காங்கே தந்துள்ளார். அதில் ஒன்று தன் சிலுவையைச் சுமக்காமல் என்னை நாள்தோறும் பின்பற்றுபவர் எனக்கு ஏற்புடையவர் அல்லர். தன் தாயையோ தந்தையையோ அல்லது மகனையோ மகளையோ என்னை விட மிகுதியாக அன்பு செய்பவனும் எனக்கு ஏற்புடையவராக இருகடக முடியாது என (மத் 10:37-38) இப்படி விபரிக்கிறது. விசுவாசிகளாகிய நாம் எமது சாட்சியாக வாழாத எக்குடும்பமும் விசுவாசிகள் அல்ல. நற்செய்தியை ஓற்றுக்கொள்பவர் அதை வாழ்ந்து காட்ட வேண்டும். உங்களுக்காக நான் வகுத்திருக்கும் திட்டங்கள் எனக்குத் தெரியுமன்றோ. அவை வளமான எதிர்காலத்தையும் நம்பிக்கையையும் உங்களுக்கு ஊட்டுவதற்கான நல்வாழ்வின் திட்டங்களே அன்றி கேடு விளைவிப்பதற்கான திட்டங்கள் அல்ல என்கின்றார் ஆண்டவர். நீங்கள் என்னிடம் வந்து கூக்குரலிட்டு மன்றாடுவீர்கள். அப்பொழுது நான் உங்களுக்கு செவி கொடுப்பேன் என எரே29:11-12 இப்படிச் சொல்லி நிற்கின்றது. மீட்பை நம்முடைய சொந்த முயற்சியால் அடைய முடிவதில்லை அது கடவுளின் கொடை அவர் முன்னிலையில் எமது பலவீனத்தை உணர்ந்து அவரிலே நாம் நம்பிக்கை கொள்ள வேண்டும். இந்த அன்பிய வாழ்வின் ஊடாக கிறிஸ்த வாழ்வின் முதிர்ச்சியை நோக்கி பயணிப்போம். அன்பியவாழ்வு பிறரிடம் பகிர்ந்து கொள்ளவே நமக்கு தரப்பட்டுள்ளது. பிறரிடம் பகிர்ந்து கொள்ளவே நமக்கு தரப்பட்டுள்ளது. ஒவ்வொரு கிறிஸ்தவரும் திருத் தூதரே என்று திருத்தந்தை பிரான்சிஸ் தனது உரையில் கூறி இருக்கின்றார். மனித மதிப்பீடுகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதை விட இறையரசின் விழுமியங் களுக்கு முக்கியத்துவம் கொடுப்பது அவசியம் புதிய வாழ்வு பிறக்க வேண்டுமென்றால் எமது பழைய வாழ்வுக்கு நாம் மடிவது அவசியம் விதையின் இறப்பில் தான் புதுவாழ்வு பிறக்கின்றது. எமது பிறப்பின் பயனை நாம் இறப்பதற்குள் அடைவதற்காகத் தான் இக்காலங்கள் நம் ஒவ்வொரு வருக்கும் தரப்பட்டிருக்கின்றன. கடவுளால் ஆழப்படாதவன் கடவுளைத் திருப்திப்படுத்தாதவன் தன்னையே திருப்திப்படுத்துபவன் எப்போதுமே சந்தோசப்படுவதில்லை ஒருமுறை இயேசுவின் பன்னிரண்டு சீடர்களில் ஒருவரான பிலிப்பு என்பவர் ஆண்டவர் இயேசுவிடம் ஆண்டவரே தந்தையை எங்களுக்கு காட்டும் அதுவே போதும் என்றார். இயேசுவோ பிலிப்புவே இத்தனை காலம் நீ என்னோடு வாழ்ந்தும் தந்தை என்னுள்ளும் நான் தந்தையுள்ளும் இருக்கின்றேன் என்று நீ இன்னும் விசுவசிக்கவில்லையா? என்று கேட்டார். இது அன்று வாழ்ந்த பிலிப்புவின் ஏக்கம் மட்டுமல்ல ஆயிரம் ஆயிரமாண்டு காலமாக மனித வாழ்வின் தவிப்பும் இதுதான். மனிதன் இறைவனைக் காண வேண்டும். அவர் எத்தகையவர் என்பதை அறிய வேண்டும் அவரோடு உறவாடி உரையாடி நிலைவாழ்வைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்பது தான் மனித வாழ்வின் உயிர்த்தேடல். மனிதனுடைய வாழ்வும் வரலாறும் இறைவனைத் தேடும் திருப்பயணமே. மனிதன் இறைவனைத் தேடிக் கொண்டிருக்கின்றான். இறைவனே மனிதனைத் தேடிவந்து அவனோடு உறவாடி உரையாடி தான் யார் என்பதை அவர்களுக்கு வெளிப்படுத்தினார். அதனுடைய உச்சநிலை தான் இறுதி இராப்போசன நிகழ்வு. நீங்கள் இப்போது தூய்மையாய் இருக்கிறிர்கள் ஆனால் எல்லோரும் தூய்மையாய் இல்லை நான் செய்வது இன்னதென்று உங்களுக்குத் தெரிகிறதா? யோவா 13:11-15 வரை உள்ள வார்த்தைகள் இதை எமக்கு விபரிக்கின்றன. நம்பிக்கை என்பது அலங்காரப் பொருளோ அல்லது கண்காட்சிக்குரியதோ அல்ல? நம்பிக்கை இயேசுவை உண்மையான வாழ்வாக்குவதாகும். ஆண்டவன் வாசல் அளவில் சிறியது. சாத்தான் வாசல் சாலையில் பெரியது. அதிலே செல்பவர் அளவில் குறைவு இதிலே செல்வோர் எத்தனை பேரோ. குறுகிய வாசலில் குனிந்து செல்லுங்கள் நிறைந்த இடத்தில் நிம்மதி பெறுவீர்கள். கேட்கச் செவியுள்ளோர் கேட்கட்டும்.

**நன்றி**

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.238
## பேதுருவுக்கு எழுதப்பட்ட திருமுகங்கள்

உங்கள் விடைகளை ஆனி மாதம் 25ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும். சரியான விடைகளை எழுதும் மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பி வைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும். உங்கள் விடைகளை பிறிதொரு தாளில் எழுதி அனுப்ப வேண்டும். **(பதிப்பாசிரியர்)**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 01 | | | 02 | | | 03 |
| 04 | ✸ | ✸ | | 05 | ✸ | | ✸ | | |
| | 06 | | 07 | | | | | 08 | ✸ |
| 09 | | 10 | | | | ✸ | | ✸ | |
| 11 | | ✸ | | | 12 | | 13 | | |
| | | 14 | | ✸ | | 15 | | ✸ | 16 |
| 17 | 18 | | 19 | ✸ | 20 | | 21 | | ✸ |
| 22 | | | ✸ | | ✸ | | | ✸ | |
| | ✸ | ✸ | 23 | | | ✸ | | 24 | |
| | | 25 | ✸ | 26 | 27 | | 28 | ✸ | 29 |

உங்கள் விடைகளை குறுக்கெழுத்துப் போட்டி, மன்னா பத்திரிகை அலுவலகம், கலையருவி, இல. 202, தலைமன்னார் வீதி, மன்னார் என்ற முகவரிக்கு அனுப்பவும்.

(-) என்ற அடையாளம் சுட்டி நிற்பது முழு இறை வார்த்தையின் இடைச்சொற்கள் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்)

**இடமிருந்து வலம்**

1. யாரும் எல்லாரும் .............................. மாறவேண்டுமென விரும்புகிறார்.
2. முற்காலத்தில் மக்களிடையே .................. இறைவாக்கினர் தோன்றினார்.
7. ஆண்டவரின் பார்வையில் ஒருநாள் ................ ஆண்டுகள் போலவும் இருக்கின்றன.
11. இவ்வாறு குன்றா எதிர்நோக்குடன் ............. வாழ்கிறோம்.
12. ஆகவே கடவுளின் திருவுளப் .................. துன்பப்படுகின்ற -வர்கள் அவர் நம்பத்தக்கவர்.
13. கடவுள் சந்திக்க வரும் ....................... அவரைப் போற்றிப் புகழ்வார்கள்.
14. .......... மலையில் அவரோடு இணைந்தபோது நாங்களே கேட்டோம்.
20. இயேசுக்கிறிஸ்துவோடு இணைந்து வாழும் ...................... அனைவருக்கும் அமைதி உரித்தாகுக.
22. நீங்களும் ஆவிக்குரிய இல்லமாகக் .................. எழுப்பப் படுவீர்களாக.
23. நம் ஆண்டவரும் உலகத்தின் அழிவு ............................ களிலிருந்து தப்பினவர்கள்
24. அழிவு அவர்களுக்காக .................... வைத்துக் காத்துக் கொண்டிருக்கிறது.
27. ஏனெனில் கடவுளின் மாட்சிமிக்க தூய ............................ உங்கள்மேல் தங்கும்.
13. நல்வாழ்வை ........ அதை அடைவதிலே கருத்துக்கொள்க.
15. அவர்களது .................. தங்கள் பொருட்டல்ல.
19. இவர்களது கண்கள் கற்பு நெறியிழந்த ...............களையே நாடுகின்றன.
24. உங்கள் மூதாதையரிடமிருந்து கொடுக்கப்பட்ட ................ என்னவென்று உங்களுக்குத் தெரியும்.
25. நல்லுறவு கொண்டவர்களாய்க் ........................ வகையில் முழு முயற்சி செய்யுங்கள்.
27. தீமைக்குப் பதில் மாறாக .................. கூறுங்கள்.
28. இறைப்பற்றில்லாதோரும் .......................களும் தண்டனை பெறுவது திண்ணமன்றோ.

**மேலிருந்து கீழ்**

2. அந்நாளில் வானங்கள் எரிந்தழிந்து பஞ்சபூதங்கள் வெந்துருகிப் ...........................
3. தங்கள் சொந்த ................. நாட்டங்களுக்கேற்ப வாழ்ந்து உங்களை எள்ளி நகையாடுவர்.
5. மனித இயல்போடிருந்த அவர் இறந்தாரெனினும் ஆவிக் குரிய இயல்புடையவராய் .................... பெற்றெழுந்தார்.
6. ......................... அழிந்து போகாமல், எல்லாரும் மனம்மாற வேண்டுமென விரும்புகிறார்.
7. தலைமை ............................... வெளிப்படும்போது அழியா மாட்சியுள்ள முடியைப் பெற்றுக்கொள்வீர்கள்.
11. நீங்கள் தூயவராயிருங்கள். ஏனெனில் .............. தூயவன்.
12. ஊதியத்திற்காகச் செய்யாமல் விருப்போடு ...................... செய்யுங்கள்.
13. கடவுளின் ....................... எதிர்பார்த்து அவர் வருகையை விரைவுபடுத்த வேண்டும்.
14. உங்கள் நேர்மையான மனத்தைத் ............ எழுப்புகிறேன்.
15. தீய நாட்டத்தால் இறைத்தன்மையில் ........... பெறுங்கள்.
17. இயேசுக் கிறிஸ்து வெளிப்படும் போது அந்நம்பிக்கை உங்களுக்குப் ................... மாண்பும் பெருமையும் தருவதாய் விளங்கும்.
21. உங்கள், அவர் உங்கள்மேல் ............. கொண்டுள்ளார்.


**கீழிருந்து மேல்**

4. கடவுளின் வார்த்தையால் .......................ப் பிறப்பு அடைந்-துள்ளீர்கள்.
7. இவ்வாறு உங்கள் நம்பிக்கையின் குறிக்கோளான ............. மீட்பையும் பெறுகிறீர்கள்.
8. அந்த ...............யான மனிதர், வேதனையுறச் செய்தன.
9. நீங்கள் அவரைப் பார்த்ததில்லை; எனினும் அவர்மீது ......... செலுத்துகிறீர்கள்.
10. பேச இயலாத கழுதை மனித முறையில் ....................... அந்த தடுத்தது.
12. உங்களை ஊக்குவிக்கவும் கடவுளுடைய மெய்யான அருளைப் பற்றிச் சான்று ..................வுமே எழுதினேன்.
13. வாழ்க்கையில் இன்பம் காணவும் தம் .........................க் காத்துக்கொள்க.
15. நமக்கு அருளப்பட்ட ஞானத்தின் .................... இவ்வாறு தான் உங்களுக்கு எழுதியுள்ளார்.
16. கட்டுவோர் புறக்கணித்த ......................... முதன்மையான மூலைக் கல்லாயிற்று.
18. ஆனால் ஆண்டவருடைய நாள் திருடனைப்போல ...........
26. உலகத்தின் அழிவு சக்திகளிலிருந்து தப்பினவர்கள் மீண்டும் அவற்றில் ........................ அவற்றால் கேடுள்ளதா -யிருக்கும்.
28. வஞ்சகமற்ற வார்த்தையாகிய ............................ அருந்த ஆர்வமுள்ளவர்களாயிருங்கள்.
29. ..........................அவர்களுக்காக விழி வைத்துக் காத்துக் கொண்டிருக்கிறது.

**வலமிருந்து இடம்**

1. மண்ணுலகம் நீரிலிருந்தும் நீராலும் நிலைபெற்றிருந்தது என்பதை இவர்கள் வேண்டுமென்றே .................................. விடுகிறார்கள்.
3. ஏனெனில் ............ செய்து துன்புறுவதைவிட, கடவுளுக்குத் திருவுளமானால் நன்மைசெய்து துன்புறுவதே மேல்.
7. கப்பதோக்கியா, ................. பித்தினியா ஆகிய நாடுகளில் சிதறுண்டு.
8. ஏனெனில் எனது இக்கூடாரம் பிரிக்கப்படும் ...................... விரைவில் வரும் என்பது எனக்குத் தெரியும்.
10. இப்போது அந்நாளிலே ................. வகை கொள்வீர்கள்.
12. பழிச்சொல்லுக்குப் .....................ச்சொல் கூறாதீர்கள்.

## 10ம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 13 07 1942 — இறப்பு 22 05 2013

**அமரர். திரு. வேதநாயகம்**
**ஆவணம், நானாட்டான்**

ஈரைந்து ஆண்டுகள் உருண்டோடிப் போயின
இதயத்தின் நினைவுகள் உருண்டோடவில்லை
காலங்கள் கடந்து சென்றாலும்
கணப்பொழுதும் உங்கள் நினைவுகள் எம் மனதில்
ஐயா, எங்கள் செபம் எப்போதும் உங்களுக்காக,
எங்களுக்காக வேண்டுங்கள் இறைவனிடம்.
உங்கள் ஆன்மா இறைவனில் இளைப்பாற செபிக்கும்.

**அன்பு மனைவி, பிள்ளைகள்**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்**

## விண்ணகப்பிறப்பின் 4ம் வருட நினைவு



பிறப்பு 22 ✝ 04 ✝ 1945 — இறப்பு 01 ✝ 05 ✝ 2019

**அமரர். அலஸ்பிரான்சிஸ் (ராஜா)**

**"நீர் என்னிடம் ஒப்படைத்தவர்களுள் ஒருவரையும் நான் அழிவுற விடவில்லை"**

அன்பிற்கு இலக்கணமாய் அமைதியின் பிறப்பிடமாய்
நற்பண்புகளின் விளைநிலமாய் பாசத்தின் வெளிப்பாடாய்
வாழ்விற்கு நல்வழிகாட்டியாய் இப்பாரினிலே
இறையாசீர் மிகப்பெற்று நிறைவாழ்வு நீர் வாழ்ந்தீர்
நின் ஆன்மா அமைதியில் இளைப்பாற
இறைஞ்சுகின்றோம் யாமெல்லாம்

**பிரிவால் துயருறும்**
**அன்பு மனைவி, மக்கள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

## விவிலியக்குறுக்கெழுத்துப் போட்டி இல. 236
## சரியான விடைகளை அனுப்பியவர்களில்

பரிசுபெறும் மூன்று அதிஸ்டசாலிகள்:



**முதலாம் பரிசு:**
வயலட் யோண்
யாழ்ப்பாணம்



**இரண்டாம் பரிசு:**
பிரதீப் டக்ஸலா
கீரிப்பங்கு

**மூன்றாம் பரிசு:**
அ. இனற் றுக்சனா
அடம்பன்

**விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 74 பேர்.**
**சரியான விடைகளை எழுதியோர் 73 பேர்.**

### விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.236ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப் பெறும் போட்டியாளர்கள்

1. ஜோ. டக்ஸ்ரோன் - கீரிப்பங்கு
2. ச. பத்திநாதன் பீரிஸ் - பெரியபண்டிவிரிச்சான் பங்கு
3. விமலேஸ்வரன் கிறிஸ்ரி திவியன் - குழந்தையேசுபுரம்
4. சலமோன் ஆதளா - நொச்சிக்குளம்
5. சத்தியறாஜ் அனன்ஷினா - நாகதாழ்வு
6. யோ. ஆன் நிருஜன் லெம்பேட் - வங்காலை
7. நவம் நவிசன் - சிறுத்தோப்பு
8. நவம் நயோசன் - சிறுத்தோப்பு
9. ரேறியன் ஜெனோறி - பள்ளிமுனை
10. லிவி றொபின்சன் - பள்ளிமுனை
11. ரவிசங்கர் சறோஜினி - ஜோசவ்வாஸ்நகர்
12. றூ. மேரி பிறக்சி டயஸ் - வங்காலை
13. றூ. யூட்ஸ்சிக்கா டலிமா - வங்காலை
14. றூ. ஹறிஸ்மா டலிமா - வங்காலை
15. ஆ. றூபன் ஜீசஸ் டலிமா - வங்காலை
16. ஆன் ஸ்ரேசி றூபராஜ் - பள்ளிமுனை மேற்கு.
17. சதீஸ்குமார் சர்சினி - மகாறம்பைக்குளம்
18. அ. டிலக்சன் - மடுக்கரை
19. அன்ரன் ஜெயக்குமார் அபிசான் - தோட்டவெளி
20. வின்சன் யோகவதி - பெரியநீலாசேனை
21. சந்தியோகு போல் றொபின்சன் - பெரியநீலாசேனை
22. அ. அபர்ணா - தோட்டவெளி
23. செ. ஆன் நியூசிக்காதுரம் - தாழ்வுபாடு
24. செ. வளன் நிலுஜன் துரம் - தாழ்வுபாடு
25. செ. அஞ்சலா டயஸ் - தாழ்வுபாடு
26. றி. ஆன் ஆஸ்லின் துரம் - தாழ்வுபாடு
27. அ. செராபினா - உயிலங்குளம் பங்கு
28. ஜோ. ஆன் லூர்திகா - பறப்பாங்கண்டல்
29. ஜோ. ஆன் கரணியா - பறப்பாங்கண்டல்
30. ஜெ. நிரூபா - பெற்றா
31. நீ. நிலவரசி - அந்தோனியார்புரம்
32. தி. ஜென்சன் - அந்தோனியார்புரம்
33. தி. திகழரசன் - அந்தோனியார்புரம்
34. தி. ஜெதுசன் - அந்தோனியார்புரம்
35. றபேக்கா பற்றிக் - சின்னக்கடை
36. சுரேஸ் சுதிஸ் - அசீசி சிறுவர் இல்லம்
37. சி.வி. யோட்ஸ் - சின்னப்பண்டிவிரிச்சான்.
38. வி. மேரி றெஜினா - சின்னப்பண்டிவிரிச்சான்.
39. ச. ஜஸ்மின்கசில் - மடுக்கரை
40. ச. மரிய துசாந் - கட்டைக்காடு
41. அ. ஜஸ்மின் ஷறோன் - ஆவணம்
42. இ. டில்ஷா - கட்டைக்காடு
43. ஸ்ரனிஸ்லாஸ் கிஷோலினி கூஞ்ச - பெரியபண்டிவிரிச்சான்
44. S. டென்சியா பெரேரா - பேசாலை
45. T. சுயாந்தினி - சாவற்கட்டு.
46. J. ஜெவான்ஷிகா - நானாட்டான்
47. M. பிளண்ரீனா - மன்னார்
48. X. குணமணி - பெரியகடை
49. S. செபமாலை - வங்காலை
50. T. மிறோன் றோச் - பள்ளிமுனை
51. N. கிறிஸ்ரீனா - உயிலங்குளம் பங்கு
52. S. கொலஸ்ரீனா - உயிலங்குளம் பங்கு
53. S. கிருஷியா - உயிலங்குளம் பங்கு
54. T. றேச்சல் - பள்ளிமுனைமேற்கு
55. R. செலின் மதுஷ்ஷா - கட்டைக்காடு
56. R.E. பிகிறாடோ - பள்ளிமுனை கிழக்கு
57. K.R. அற்றியானாபேபி - ஆசிக்குளம்
58. A. கவியாழினி - சின்னப்பண்டிவிரிச்சான்.
59. F. றினோ றொக்சன் - கட்டைக்காடு
60. N. மடோனா - ஆசிக்குளம்
61. K.R. கலிஸ்ரஸ் - ஆசிக்குளம்
62. T. எட்மன் பிரேங் - பள்ளிமுனை கிழக்கு
63. N. பேபி அஸ்விதா - ஆசிக்குளம்
64. T. இருதயமேரி - கற்குளம்
65. K. துளசிகா - கற்குளம்.
66. T. மாரியோ சுவில்சன் - பள்ளிமுனை கிழக்கு
67. R. ஜெகநாதன் - அளவக்கை பங்கு
68. G. ஜொகிஷா - சிறுத்தோப்பு
69. G. ஜொபிஷா - சிறுத்தோப்பு
70. J. அன்ரனிற்றா யாழினி - சின்னப்பண்டிவிரிச்சான்.

# நினைவு கூருகின்றோம்..!

## 3ம் நாள் நினைவஞ்சலி

"நான் ஆண்டவரின் இல்லத்தில் நெடுநாள் வாழ்ந்திருப்பேன்"

### அமரர். சந்தியா அந்தோனி லெம்பேட்

வங்காலை



மலர்வு 17.10.1945 உதிர்வு 29.03.2023

வேரென நீ இருந்தாய் விழுதுகள் ஊன்றிட உதிர
நீரினை சொரிந்து நின்றாய்
எமக்கு காலத்து காரென நீ கிடைத்தாய்
பயிர்கள் செழிப்புற வீரனாய் உழைத்து நின்றாய்
போயினை எமை பிரிந்து நாமோ ஆயனை
பிரிந்த மந்தைகளாய் ஆறுதற்கு இங்கு யாருமில்லை
தாயென தந்தையாய் யாவுமாய் நின்ற தெய்வம்
கனவென நீ இருந்தாய் நாமே துன்பக் கடலினுள்
நீந்துகின்றோம்... மரித்தவன் உயிர்த்தெழுந்தான்
அவன் தவக்காலத்தே உனை அழைத்தான்
விசுவாசத்தால் நீ நிறைந்தாய் நெஞ்சினில்
இயேசுவை இருத்தி வைத்தாய்
பேசுதற்கு வார்த்தையில்லை ஐயா பிரிந்து நாம்
வாடுகின்றோம்.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர், உறவினர், நண்பர்கள்

## 2ம் ஆண்டு நினைவஞ்சலி

"இதோ உம்மை பெயரிட்டு நாமே அழைத்தோம் ஆகவே நீ என்றும் எமக்கே சொந்தம்,,



### அமரர். வே. டிறோன்றஞ்சித்

பிச்சகுளம், முருங்கன்

மலர்வு 1995.01.06 உதிர்வு 2021.05.11

தாயவள் கருவினில் இருவராகி
தனியொருவனாய் தரணியில் உயர்ந்து நின்றவனே
விதியின் விபரீத விளையாட்டில் வித்தாகிப்
போனவனே
விழி நீரின் ஈரம் காயும் முன்னே ஈராண்டு நிறைவில்
உன் உடன்பிறப்புக்கள்
உன் நிமிர்ந்த நடையும் சிவந்த விழிகளும் - எம்
நெஞ்சை விட்டு மறைய மறுக்கின்றது.
ஈராண்டென்ன ஈராயிரம் ஆண்டானாலும்
மறையுமோ உன் நினைவுகள்
எம் உறவினை இடைநடுவே விட்டுப் பிரிந்த நீ
இறைவனின் உறவினில் நிரந்தரமாய்
இணைந்திருக்க உனக்காக இறைவனை இறைஞ்சி
நிற்கின்றோம்.

பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா, அக்கா, தங்கை, அத்தான்,
தம்பி, குடும்ப உறவுகள், நண்பர்கள்.

## 1ம், 3ம் ஆண்டு நினைவஞ்சலி

"உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே, என்னில் நம்பிக்கை கொள்பவர்
இறப்பினும் வாழ்வார்"



மண்ணில் 20 08 1949 — விண்ணில் 29 05 2022

### அமரர். கிறிஸ்தோகு மிக்கேல் பிரான்சிஸ்



மண்ணில் 03 12 1977 — விண்ணில் 23 11 2020

### அமரர். ஜெயபாலன் மெரினாள் (நிலானி)

ஆண்டுகள் கடந்து போனாலும் ஆறவில்லை எம் துயரம்
அன்பென்னும் மழை பொழிந்து அகிலத்தில் எம்மை வாழ வைக்க கலங்கரை விளக்காய்
காவல் தெய்வங்களாய் எங்களை பாதுகாத்தீர்களே உங்கள் பிரிவால் ஏங்குகின்றோம்.
காலமெல்லாம் எம்மை காத்திருப்பீர்கள் என்று இருக்க கண்ணீரை தந்துவிட்டு விண்ணுலகம் சென்றீர்களே.
ஆற்றொண்ணாத் துயரமது எங்கள் உள்ளத்தில் ஊற்றாகி ஓடுகின்றது. பூமிதனில் பலயுகம் கடந்தாலும்
உங்களது அன்பை என்றுமே மறவோம். உங்கள் ஆன்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

பிரிவால் நினைந்துருகும்
மனைவி, பிள்ளைகள், சகோதரங்கள், பேரப்பிள்ளைகள்.

## 2ம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 17 09 1954 — விண்ணில் 13 05 2021

### அமரர் திருமதி. யேசுதாசன் இன்பமலர்

கண்டல்

உயிருக்குள் அடைகாத்து உதிரத்தை பாலாக்கி
தாலாட்டி பல இரவுகள் தூக்கத்தை தொலைத்து
எமக்காக வாழ்ந்த அன்புத் தெய்வமே அன்போடு பழகி
நேசத்தோடு அனைவரையும் உறவுகளையும்
உள்ளத்தால் இணைத்து மனதால் மகிழ்வு கண்டீர்கள்
அம்மா! இறைவன் சந்நிதியில்
ஒரு குறையின்றி மகிழ்ந்திருங்கள் ஆண்டவர்
உங்களை அருகிருந்து காப்பார் அம்மா.

பிரிவால் துயருறும்
அன்புக்கணவர், மகள், மருமகன்,
பேரன், உற்றார், உறவினர்கள்,
சகோதரிகள், நண்பர்கள்.

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி

"நம்பிக்கை கொண்டோரை மீட்க
கடவுள் திருவுளம் கொண்டார்" (1கொரி 2:21)



மலர்வு 13 11 1953 — உதிர்வு 22 05 2022

### அமரர் சில்வேஸ்டர் சாள்ஸ் நவரெட்ணம் குலாஸ்

பேசாலை

பாரினில் நவரெத்தினமாய் வாழ்ந்த பாசமிகு எங்கள் அப்பாவே,
பக்குவமாய் எங்களை வளர்த்திட்ட பண்பாளன் நீங்கள்
இவ்வுலகில் கொண்ட இன்பம் போது என்றா
இன்னவனின் இன்பம் தேடி சென்று விட்டீர்கள்
தேடி உம்மை வாடிவிட்டோம்..
விண்ணிறைந்த அலங்கரிப்பில் பொன்மகனின்
ஆன்மாவும் இணைந்திருக்க..
மெய்யழுத கண்ணீரால் வருடம் ஒன்று கழிந்ததுவே
நித்தியத்தில் நீர் இருக்க தொழுது மனம் கசிகின்றோம்.
ஆண்டவரே அருட்பெருக்கால் அணைத்து
ஆசீர் தந்தருள்வீர்..!

பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள், உற்றார் உறவினர்கள்.

## 4ம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் பிரசவம் 09 10 1951 — விண்ணில் பிரவேசம் 06 06 2019

### திரு. சிமியோன் சந்தான் பாலா

(ஓய்வுநிலைக் கிராம அலுவலர்)
மாவிலங்கேணி, முருங்கன்

"உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே, என்னில் நம்பிக்கை
கொள்பவர் இறப்பினும் வாழ்வார்"

உங்களைப் பிரிந்து நான்கு ஆண்டுகள்,
எங்களோடு வாழ்ந்து, எங்களைக் காத்து
எங்களுக்கெல்லாம் ஒளியாகி, வழியாகி
எங்கள் இதயங்களில் என்றென்றும் வாழ்கிறீர்கள்.
நீங்காத நினைவுகளுடன், நிறைந்த நன்றியுடன்
இறையேசுவின் இன்ப சந்நிதானத்தில்
நீங்கள் இளைப்பாறப் பிரார்த்திக்கிறோம்.

பிரிவால் துயருறும்
உங்கள் அன்பு மனைவி ஜெயா,
உங்கள் உடன்பிறப்புக்களோடும்,
உறவுகளோடும்.

## 15ம் ஆண்டு, 3ம் நாள் நினைவஞ்சலி



### திரு. குமாரசிங்கம்

பிறப்பு 09.02.1929 இறப்பு 15.04.2008



### திருமதி. ஜெப இங்கிதம் குமாரசிங்கம்

பிறப்பு 12.07.1938 இறப்பு 12.04.2023

"நாம் இவ்வுலகில் குடியிருக்கும் உடலாகிய கூடாரம்
அழிந்து போனாலும் கடவுளிடமிருந்து கிடைக்கும் வீடு ஒன்று
விண்ணுலகில் நமக்கு உண்டு" 2கொரி 5:1

பிரிவால் துயருறும்: பிள்ளைகள், உறவினர்கள்
பாலைக்குளி, அடம்பன்.

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 17 06 1961 — உதிர்வு 27 05 2022

### திரு. மரிசால் யேசுராசன்

(முருங்கன்பிட்டி, முருங்கன்)

தந்தை என்ற சொல்லின் திருஉருவமே!
பிறர் கைநாடா பிறவி பெருங்கடலே!
தன்னம்பிக்கையை தனித்துவமாய் கொண்டாயே!
உம் மனஉறுதியே என்றும் வெல்வது இறுதியே!
உறவுகளையே உம் சிந்தனையாய் கொண்டாயே!
உம் நினைவுகளை மட்டும் பரிசாக தந்தாயே...

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

"மன்னா பத்திரிகை"
மன்னா அலுவலகம், கலையருவி,
இல: 202, தலைமன்னார் வீதி, மன்னார்.
தொ.இல: 023-2250789, 076-3801841
- mannamnrc@gmail.com - manna.lk - Mannar Catholic Media, Madhu Matha TV

"மன்னார் கத்தோலிக்க அச்சகம்"
கலையருவி, இல: 202, தலைமன்னார் வீதி, மன்னார்.
தொ.இல: 023-2223674, 077-5338732 / Email: mannarcatholicpress@gmail.com
சகல விதமான பதிப்பக வேலைகளும் நியாயமான விலையிலும்,
தரமான முறையிலும் அச்சிடப்படும்.

இப்பத்திரிகை மன்னாரில் உள்ள மன்னா அலுவலகத்தில் வடிவமைக்கப்பட்டு மன்னார் கத்தோலிக்க அச்சகத்தில் அச்சிடப்பட்டு மன்னா நிர்வாகத்தால் வெளியிடப்பட்டது.